திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2025,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:10, Pages:56
MAY-2025, Price Rs.20/-



கார்வேடிநகரம்
ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
19-05-2025 முதல் 27-05-2025 வரை

ஆந்திர மாநில அரசு மற்றும்
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
சார்பில் வெங்கடபாளையம்
அமராவதியில்
15-03-2025 அன்று
ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமானுக்கு
திருக்கல்யாண உற்ஸவம்
மிகவும் வைபவமாக
நடைபெற்றது.



அன்றைய தினம் ஸ்ரீஸ்ரீநிவாசப்பெருமானுக்கு மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு தம்பதியினர் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீசிறிய ஜீயர் சுவாமிகள், மேதகு ஆந்திரமாநில ஆளுநர் திரு.அப்துல் நஜீர் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆனம் ராமநாராயண ரெட்டி அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பி.ஆர்.நாயுடு அவர்கள், தி.தி.தே.செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள், இணைச் செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்












ஸம்ஸார ஸாகர நிமஜ்ஜந முஹ்யமாநம்
தீநம் விலோகய விபோ! கருணாநிதே! மாம் ।
ப்ரஹ்லாத கேத பரிஹார! பராவதார!
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

**சம்சாரமெனும் கடலில் மூழ்கி மயக்கமும்
துன்பமும் அடைந்த என்னை,
பிரகலாதனின் துக்கத்தைக்
களைவதற்காக அவதாரம் எடுத்தவரே!
கருணைக் கடலே! ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே!
தங்கள் கடைக்கண்ணால் கடாக்ஷித்து
தங்கள் திருக்கரங்களைக் கொண்டு
அடியேனைக் காத்தருள வேண்டும்.**

**- ஸ்ரீ லக்ஷ்மிந்ருசிம்ம
கராவலம்ப ஸ்தோத்திரம்**



அச்சே$_2$த்$_3$யோऽயமத$_3$ாஹ்யோऽயம்
அக்லேத்$_3$யோऽசோஷ்ய ஏவ ச।
நித்ய: ஸர்வக$_3$த: ஸ்த$_2$ாணுர்
அசலோऽயம் ஸநாதந:॥

**இந்த ஆத்மா வெட்டுப்பட முடியாதவன்;
எரிக்கப்பட முடியாதவன்; நனைக்கப்பட
முடியாதவன்; மேலும், சந்தேகமின்றி
உலர்த்தப்பட முடியாதவன்; மற்றும் இந்த
ஆத்மா நித்தியமானவன்; எங்கும்
நிறைந்தவன்; இயக்கமற்றவன்; ஸ்திரமாக
இருப்பவன்; சாசுவதமானவன்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–24*

## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, நாராயணவனம்



ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வீற்றிருக்கும் நாராயணவனம் திருப்பதியிலிருந்து சென்னை செல்லும் வழியில் 25 மைல் தூரத்தில் அமைந்து உள்ளது. இவ்வாலயத்தை 1967ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ் தானம் கையகப்படுத்தி புதுப்பித்தனர். திருமலையில் பிரம்மோத்ஸவம் நடை பெறும் சமயத்தில் இந்த ஆலயத்தில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் நடை பெறும்.

ஸ்ரீமகாவிஷ்ணு வேதவதிக்கு அளித்த வாக்கின் படி, பூமியில் ஸ்ரீநிவாசனாக அவதரித்து நாராயண வனம் எனும் தலத்தில் ஆகாச ராஜாவின் மகளாக பத்மாவதியாக அவதரித்த வேதவதியைத் திருமணம் செய்து கொண்டதால் இந்த நாராயணவனம் எனும் தலமும் பவித்ர புண்ணியத் தலமாகப் பெயர் பெற்றது. இந்த ஆலயத்தின் திருத்தேர் உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். அந்த வைபவத்தைக் காண சுற்றுப்புறப்பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள் வருகைத் தருவர்.

**ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 10-05-2025 | சனி | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 11-05-2025 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 12-05-2025 | திங்கள் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 13-05-2025 | செவ்வாய் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 14-05-2025 | புதன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 15-05-2025 | வியாழன் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 16-05-2025 | வெள்ளி | ஹனுமத் வாகனம், மா:வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 17-05-2025 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 18-05-2025 | ஞாயிறு | ரதோத்ஸவம் | குதிரை வாகனம் |
| 19-05-2025 | திங்கள் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம் |

ரிஷிகேஷில் உள்ள ஆந்திராசிரமம் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இங்கு வேங்கடவனுக்கு நித்திய பூஜைகள், நைவேத்தியம், உற்சவங்கள் மற்றும் பண்டிகைகள் தி.தி.தேவஸ்தானம் நடத்துகிறது. 1930 ஆம் ஆண்டு ஸ்வாமி தரிசனத்திற்காக வந்த சச்சிதானந்த ஸ்வாமி என்பவர் தென் பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களுக்காக விடுதி ஒன்று தேவை என எண்ணினார். தி.தி.தேவஸ்தானம் மற்றும் மற்றவர்கள் வழங்கிய காணிக்கைகளைச் சேகரித்து ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவி விக்ரகங்களை பிரதிஷ்டை செய்து, உற்சவ மூர்த்திகளையும் தயார் செய்தார். ஆரம்ப நாட்களில் இந்த ஆந்திராசிரமம் அறக்கட்டளைக் குழுவால் நிர்வகிக்கப்பட்டது. அதன் பிறகு தி.தி. தேவஸ்தானத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

உத்திரகாண்ட் மாநிலம், டெஹ்ராடுன் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய தலம் “ரிஷிகேஷ்”. ஹ்ருஷிகேஷ் என்பதே ரிஷிகேஷ் என்றாகியது. புனிதமான கங்கை நதிக்கரையில் இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.



ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, ரிஷிகேஷ், உத்திரகாண்ட் மாநிலம்



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்


மே 2025

மலர் 04 இதழ் 10


## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| முக்கண்ணன் நரசிம்மன் | - திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 7 |
| திருவேங்கடவனின் திருவருள் | - திரு.ரவிச்சந்திரன், சிதம்பரம். | 10 |
| ஆஞ்சநேயர் வழிபாடு | - திரு.ஜி.வேலாயுதம், சேலம். | 11 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் | - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 12 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: நரசிம்மரின் குணம் கொண்ட அனுமன் | -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 14 |
| ஸ்ரீராம திவாகரரும் ஸ்ரீராமாநுஜ திவாகரரும் | -திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை. | 17 |
| அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஸ்வாமி திருக்கோயில் | | 20 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் | - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 22 |
| வித்தியாசமான திருக்கோலங்களில் பெருமாள் | -திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை. | 24 |
| ஆயுர் வேதம்: கோடையில் ஆரோக்கியம் காப்போம் | -திருமதி வி.உஷா, திருப்பதி. | 26 |
| ஆதிசங்கரர் | - திரு.சோ.செந்தில் குமார், காஞ்சிபுரம். | 31 |
| 108 திவ்யதேச வைபவம் : திருவிடவெந்தை | - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 34 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் | - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 39 |
| தொண்டு செய்யத் துடிக்கும் நெஞ்சம் | -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 41 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: மைத்ரேயர் | - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 44 |
| ராசிபலன்கள் : மே 2025 | - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 46 |
| நீதிக்கதை: உண்மையான பக்தி | -திரு.எம்.அசோக்ராஜா, திருச்சி. | 47 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | | 49 |
| சித்திரக்கதை : சுய சிந்தனையே நன்மை பயக்கும் | | 52 |



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. J. சியாமளா ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எப்பிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. P. ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயதேவியருடன் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி, கார்வேடி நகரம்.

பின்னட்டை : ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் (சித்திரம் – மணியம் செல்வன், சென்னை)



உங்களுடன்

# பகவானும் பக்தனும்

*ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ ச்ச்ரிய:*
*ஜ்ஞான வைராக்யயோச் சைவ ஷண்ணாம் பக இதீரணா*

– விஷ்ணு புராணம் 6.5.74

ஐசுவரியம், தர்மம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், வைராக்கியம் – இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக யாரிடம் இருக்கிறதோ, அவரே பகவான். பகவான் என்னும் சமஸ்கிருதச் சொல்லிற்கு வேர்ச்சொல் “பசு” (பஜ) “யார் வழிபடப்படுகிறாரோ அவர் பகவான்”. புராணங்களில் மகாவிஷ்ணுவை பகவான் எனக் கூறுவது வழக்கம்.

ஞானம், பலம், வீரியம், ஐச்வரியம், ஆற்றல், தேஜஸ் எனும் ஆறு குணங்களை உடையவன் என்று பொருள். பகம் என்றால் ஆறு, ஆன் என்றால் உடையவன். இந்த ஆறு குணங்களை உடையவன் பகவான். இந்த ஆறு குணங்களும் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஒரு சேர அமைந்துள்ளன. அதே சமயம், எம்பெருமானிடம் இந்த ஆறு குணங்கள் மட்டுமே உள்ளதாக நாம் நினைத்து விடக் கூடாது. பரிவு, தயவு, கருணை, எளிமை ஆகிய திருக்கல்யாண குணங்களும் எம்பெருமானிடத்தில் நிரம்பியிருக்கின்றன.

எனவேதான் – “எம்பெருமான் தூணிலும் இருப்பான்” என்று கூறிய பக்தப் பிரகலாதனின் வாக்கை மெய்ப்பிப்பதற்காக அரண்மனையிலுள்ள தூண்கள் அனைத்திலும் வந்து மறைந்திருந்து, கடைசியில் அவ்விரணியன் தட்டிக் காட்டிய தூணிலிருந்து நரசிங்க உருவில் வெளிக்கிளம்பினார்.

திரேதா யுகத்தில், மிக உயர்ந்த இக்ஷ்வாகு வம்சம் என்னும் க்ஷத்திரிய குலத்தில் ஸ்ரீராமபிரானாக அவதரித்தார் எம்பெருமான். தமது ஸௌசீல்ய குணத்தால் வனவாச காலத்தில் வேடர் குலத்தின் குகன், குரங்கினத்தினன் சுக்கிரீவன், அரக்கர் குலத்தினன் விபீஷணன் ஆகிய அனைவரையும் தம்முடைய சகோதரர்களாகக் கருதி, *“நின்னொடும் எழுவரானோம்!”* என்று இராமன் கூறி மகிழ்ந்ததை கம்பன் காட்டுவது அனுபவிக்கத்தக்கதாகும். அனுமனும் தன் அதீத ராம பக்தியால் “ராம” மந்திரத்தை உச்சரித்து அனைத்திலும் வெற்றி வாகை சூடினான்.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலோ தம்மிடத்தில் பேரன்பு பூண்டு மாலைகளைக் கட்டிக் கொடுத்துச் சூடிக் கொள்ளச் சொல்லி அழுகு பார்த்த மாலாகாரருக்கும் அவருடைய உறவினர்க்கும் பகவான், மோட்சத்தை அளித்தான். தாம் ஒளிந்து கொள்ள இடம் அளித்ததன் மூலம் ஆயர்குலப் பெண்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிய ததிபாண்டன் என்பவனுக்கும், அவனுடைய பானைக்கும் மோட்சத்தை அருளினார்.

இந்தக் கலியுகத்தில் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அவதரித்து மக்களிடையே பக்திப் பயிரை வளர்த்தனர். திருப்பாணாழ்வார் தம் பிரபந்தத்தில்,

*மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்*
*சந்திசெய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்*

என்று பாசுரமிடுகின்றார். இதற்கு வியாக்கியானம் அருளிய நம் பெரியோர்கள் ‘‘இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயார் தன்னுடைய இரண்டு குழந்தைகளுக்கும் ஒரே நேரத்தில் பாலூட்டுவது போன்று நம் திருவேங்கடமுடையான் திருமலையின் உச்சியில் எழுந்தருளி வானவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஒரே நேரத்தில் அருள் புரிகின்றார்” என்று அழகாக விளக்கம் கூறியருளினார். 15 ஆம் நூற்றாண்டில் அன்னமய்யா தம் அதீத பக்தியால் திருவேங்கடமுடையான் திருப்பாதங் களில் சரணடைந்து சுமார் 32000 கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

இவ்விதம் *‘‘கலௌ வேங்கட நாயக:’’* என்று புகழ்ந்து போற்றி வணங்கப்படும் நம் திருவேங்கடமுடையான் திருமலையின் உச்சியில் எழுந்தருளியிருந்து நம்மையெல்லாம் துன்பங்கள் அணுகாதவண்ணம் காத்தருள் புரிகின்றார்.

இக்கலியுகத்தில் பக்தியோடு பகவான் திருவேங்கடமுடையானின் திருப்பாதங்களில் நாம் சரணமடைந்து நற்கதியை அடைவோமாக!

# முக்கண் நரசிம்மன்

ஸ்ரீ ய:பதியான ஸ்ரீமந்நாராயணன் அர்ச்சா அவதாரத்தில் பூவுலகிலே திருக்கோயில்களில் எழுந்தருளி சேவை சாதித்து மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களால் அனுபவிக்கப் பெற்று அருளிச் செயல் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்ய தேசங்களில் ஸ்ரீயோக நரசிம்ம மூர்த்தியாய் அருள்பாலிக்கும் திவ்யதேசம் திருவேளுக்கை ஆகும். தொண்டை மண்டலமான காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள இந்த திவ்ய தேசத்தினை திருமங்கையாழ்வார் *''மன்னு மதிள் கச்சி வேளுக்கை ஆளரியை''* என மங்களாசாசனம் செய்தருளுகிறார்.

**திருவேளுக்கை**

"வேள்" எனும் சொல்லிற்கு "ஆசை" எனும் பொருளுண்டு. மிகுந்த ஆசையுடன் வேகவதி நதிக்கரையில், தெற்கு பாகத்தில் பிரம்மாவின் யாகத்தினை அசுரர்கள் நெருங்கா வண்ணம் காத்தருளும் பொருட்டு மேற்கு நோக்கி வீற்றிருந்தத் திருக்கோலத்தில் யோக நரசிம்மராக இருக்கை கொண்டுள்ளதால் "வேளிருக்கை" என்பது வேளுக்கை என மருவி திருவேளுக்கை ஆயிற்று.

திருவடி முதல் திருக்கழுத்து வரை மனுஷ்ய வடிவிலும், அதற்குமேல் சிம்ம வடிவிலும் அவதரித்து பக்தப் பிரகலாதனின் "ஸ்ரீமந்நாராயணன் தூணிலும் உளன்; துரும்பிலும் உளன்" எனும் வார்த்தையினைக் காப்பாற்றுவதன் பொருட்டும், நான்முகன் பிரம்மாவின் வரத்தினைக் காத்தருளும் பொருட்டும் தூணினைப் பிளந்து வெளியாகி சீற்றத்துடன் அட்டகாச சிரிப்பு கர்ஜனையுடன் இரணியனை வதம் செய்து முடித்து மிகுந்த ஆசையுடனே திருவேளுக்கை



திவ்ய தேசத்தில் நரசிம்மன் சேவை சாதிக்கிறார். வடமொழியில் காமாஸிகா (காம–ஆசை; ஆசிகா – ஆசனம் – இருக்கை) நரசிம்மன் எனப் போற்றப்படும் இப்பெருமான் விஷயமாக ஸ்வாமி வேதாந்த தேசிகர் எட்டு சுலோகங்கள் கொண்ட ஸ்ரீகாமாஸிக அஷ்டகம் எனும் ஸ்தோத்திரத்தை அருளிச் செய்துள்ளார்.

**முக்கண்**

*தபநேந்த்வக்நி நயந: தாபா நபசிநோது ந:*
*தாபநீய ரஹஸ்யாநாம் ஸார: காமாஸிகா ஹரி:*

– காமாஸிகாஷ்டகம் 2

திருவேளுக்கை அழகிய சிங்கர் தம்முடைய சிம்மத் திருமுகத்தில் மூன்று திருக்கண்கள் மிளிர காட்சியளிக்கிறார். வலது திருக்கண்ணில் பேரொளி



வீசும் சூரியனின் கதிர்களால் அடியார்களின் அறியாமை விலகி ஞானம் பிறக்கிறது.

இடது திருக்கண்ணில் உள்ள பூரண சந்திரனின் குளிர்ச்சியான கிரணங்கள் அடியார்களின் துன்பங்களை நீக்கிப் பேரின்பம் அளிக்கிறது. திருநெற்றியின் நடுவே அக்னியின் ஜ்வாலை வெப்பத் தணலில் அடியார்களின் இருவினை துன்பங்கள், எதிரிகளின் தீய சக்திச் செயல்பாடுகள் யாவும் எரிந்து சாம்பலாகின்றன.

இதனையே திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில், **''பைங்கண் இரண்டெரிகான்ற நீண்ட எயிற்றொடு பேழ்வாய்''** என்றும், திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் **''இவையா எரிவட்டக் கண்கள் - இவையா எரிபொங்கிக் காட்டும் இமையோர் பெருமான்''** என்றும் அருளிச் செய்வர்.

நரசிம்மமூர்த்தியின் மூன்று கண்களும், மேலும் அடியார்களை ஆட்கொண்டு துன்புறுத்தும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்கிற மூன்று விதமான தாபங்களை நீக்கி அருள்கின்றன. ஆத்யாத்மிகம் என்பது உடல் மனம் சம்பந்தமான வியாதிகள். ஆதிபௌதிகம் என்பது மற்ற பிராணிகளால் ஏற்படும் இடர்கள். ஆதிதைவிகம் என்பது புயல், மழை, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் துன்பங்கள்.

திருவேளுக்கையில் சேவை சாதிக்கும் தாபநீய உபநிஷத்தினால் துதிக்கப்படும் முகுந்தநாயகன் எனும் நரசிம்மன் அடியார்களுக்குத் தம்முடைய முக்கண் பார்வையின் தீட்சன்யத்தினாலே அவர்களின் இடர்களனைத்தும் களைந்து ஆனந்தம் அளிக்கிறார்.

## இரணியன் வதம்

*விகஸ்வர நக ஸ்வரு க்ஷத ஹிரண்ய வக்ஷஸ் ஸ்தலீ*
*நிரர்க்கள விநிர்க்களத்ருதிர ஸிந்துசந்த்யாயிதா:*
*அவநது மதநாஸிகா மனுஜ பஞ்ச வக்த்ரஸ்ய மாம்*
*அஹம் பிரதமிகா மித: ப்ரகடிதாஹவா பாஹவ:*

– காமாஸிகாஷ்டகம் –6



நரசிம்மன் மிகுந்த ஆக்ரோஷத்துடன் தூணினைப் பிளந்து வெளிப்பட்டு இரணியன் கால்களைப் பற்றிச் சுழற்றி கண்களில் தீப்பொறி பறக்க தம் மடி மீது கிடத்தி நகங்களால் இரணியன் மார்பை குத்திக் கிழித்து குருதி வெள்ளமெனப் பெருகியோட அவன் மார்பினை இரு பிளவாகக் கிழித்தார்.

சம்ஹாரம் செய்தபோது மாலை வேளை அந்தி வானத்தின் சிவப்பினை நரசிம்மத்தின் நகங்களில் வழிந்த இரணியனின் இரத்தச் சிவப்பு உணர்த்தியது. எம்பெருமானின் மற்ற அவயவங்களைக் காட்டிலும் அடியார்களைக் காத்தல் பொருட்டு நான் முன்னே நான் முன்னே எனப் போட்டி இட்டு மிகுந்த ஆசையுடனே முன்வந்து எதிரிகளை வதம் செய்யும் மதனாசிகா (காமாஸிகா) நரசிம்மனின் திருக்கைகள் அடியார்களைக் காத்தருளுகின்றன. நம்மாழ்வார், **''கடுத்தபோர் அவுணன் உடல் இருபிளவாக் கையுகிராண்ட**

எங்கடலே'' என்றும் ''போழ்து மெலிந்தபுன் செக்கரில் வான்திசை சூழும் எழுந்து உதிர புனலா'' என்றும் அருளுகிறார்.

**பிரகலாதனுக்கு அருள்:**

*ஸடா படல பீஷணே ரபஸாட்டஹாஸோத்படே*
*ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத் ப்ருகுடிகேஸபி வக்த்ரே க்ருதே*
*க்ருபா கபட கேஸரிந் தநுஜ டிம்ப தத்த ஸ்தநா*
*ஸரோஜ ஸத்ருசா த்ருசா வ்யதி பிஷஜ்ய தே வ்யஜ்ய தே*

– காமாஸிகாஷ்டகம் –7

இரணியவதம் முடிந்தவுடன் நரசிம்மம் தம்முடைய கனல் தெறிக்கும் திருமுகத்தில் பிடரி மயிர்கற்றைகள் சிலிர்த்து நிற்க, துடிக்கும் புருவங்களோடும் மிக வேகமான கர்ஜனை அட்டகாச பயங்கரப் பெரும் சிரிப்போடும், பெரும்கோபம் கொண்டவனாக தேவர்களும் மற்றவர்களும் மிகவும் பயப்படும் படியான, கம்பீரமான, மிரட்டும் விதமான தோற்றம் கொண்டிருந்தான்.

ஆனாலும், தம்முடைய ஆத்யந்த பக்தனான பிரகலாதனுக்கு மிகவும் தாயன்புடன் ஒரு தாயானவள் தம்முடைய குழந்தைக்கு முலைப் பாலை ஊட்டுவதைப் போன்று தம்முடைய தாமரை திருக் கண்களால் பிரகலாதனைக் குளிர கடாட்சித்து அருளினான்.

மற்றவர்களுக்கு பயங்கரமாகவும், பக்தப் பிரகலாதனுக்கு மிக்க சாதுவான அமிர்தமாகவும் ஒரே நேரத்தில் திருக்காட்சித் தந்தருளும் கபடமான நரசிம்ம உருவினன் எம்பெருமான் என்று அதிசயிக்கிறார் சுவாமி வேதாந்த தேசிகர்.

சுவாமி திருமங்கை ஆழ்வார் ''இரணியனைப் பற்றி வாடாத வள்ளுகிரால் பிளந்து அவன் தன் மகனுக்கருள் செய்தான்'' எனவும், சுவாமி நம்மாழ்வார் ''சீற்றத் தோடருள் பெற்று அவனடிக்கீழ்ப் புகநின்ற செங்கண்மால்'' எனவும் நரசிம்மனைப் போற்றுகின்றனர்.

மிகவும் திமிர் கொண்ட மதமெடுத்த, எவராலும் அடக்க முடியாத கொடிய பாவங்களாகிய பெரிய யானையினைப் பிளந்து ஒழிப்பவனும், தேவர்களால் வணங்கப் படுபவனுமான திருவேளுக்கை யோக நரசிம்மனைக் குறித்த காமாஸிக அஷ்டகத்தை ஒருமுறையேனும் பக்தியோடு துதிப்பவர்க்கு காமாஸிகா நரசிம்மன் வேண்டும் பலன்களை வாரி வழங்குகிறார்.

*சிறந்த என் சிந்தையும் செங்கண் அரவும்*
*நிறைந்த சீர்நீள் கச்சியுள்ளும் - உறைந்ததுவும்*
*வேங்கடமும் வெக்காவும் வேளுக்கைப் பாடியுமே*
*தாங்கடவார் தண்துழாயார்* –பேயாழ்வார்.

நரசிம்ம ஜெயந்தி அன்று நரசிம்மர் துதிகளைத் துதித்து அவருடைய இன்னருளினைப் பெற்றிடுவோம்.

**– திரு ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி,**
**94438 79592**




*''தோளை வலிவுடையதாக்கி*
*உடற்சோர்வும்*
*பிணி பலவும் போக்கி - அரி*
*வாளைக் கொண்டு பிளந்தாலும்*
*கட்டு மாறா உடல் உறுதி தந்து''*

**என்று இளைஞர்கள் எவ்வாறு உடல் உறுதி பேண வேண்டும் என் பதை எடுத்துரைக்கிறார் பாரதி.**

*''கடுமை கொண்ட தோளினாய் வா*
*வா வா*
*நோய்களற்ற உடலினாய் வா வா*
*வா''*

**என்று தன்னை எவ்வாறு பேணி காத்துக் கொள்ள வேண்டும், உடல் உறுதிபெற ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்றும் கூறுகிறார்.**

**உடற்பயிற்சி உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் வலிமை தரும் என்று குழந்தைகளை உற்சாகப்படுத்துகிறார் பாரதி.**

**ஆகவே குழந்தைகளே! அலைபேசியை விட்டு விட்டு ஆடிப்பாடி விளையாடி உடலினை கட்டுக்கோப்பாகவும், வலிமையாகவும், எதையும் எதிர்க்கும் துணிவோடும், இறை பக்தியோடும் இருந்திடுங்கள்.**

**டாக்டர் கவிஞர்**
**இரா. உமா பாரதி, சென்னை,**
**மகாகவி பாரதியார் வம்சாவளி**
**73389 97938**

ஆகஸ்ட் 2020 கோவிட்–19 முதல் அலையின் போது பாதிக்கப்பட்டு எந்த மருத்துவமனையிலும் எனக்குப் பதிவு சேர்ப்பு கிடைக்கவில்லை. கடைசியாக என்னுடைய மாமாவின் முயற்சியில் சென்னையில் உள்ள பிரபல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கிட்டதட்ட 10 நாட்கள் ஐ.சி.யு.வில் கரோனா வார்டில் இருந்தேன். நான் பிழைக்க மாட்டேன் என்று மருத்துவர் சொல்லிவிட்டார். ஒரு நாள் இரவு எனக்கு திருப்பதி பெருமாளே கனவில் வந்து கவலைப்படாதே, நான் இருக்கிறேன் உனக்காக என்று கூறினார். நான் உடனே கோவிந்தா! கோவிந்தா!! என்று உரக்கக் கத்தினேன். பணியில் இருந்த மருத்துவர் மற்றும் செவிலியர் எல்லாம் ஓடி வந்து என்ன ஆச்சு ரவிச்சந்திரன். இது மருத்துவமனை. இது போன்று சப்தம் போடக் கூடாது என்று சொன்னார்கள். மறுதினமே என்னை வார்டுக்கு மாற்றி விட்டார்கள். உடனடியாக நான் குணமடைந்து வீடு திரும்பினேன்.

2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரத்தக் குழாய்களில் அடைப்பு வந்து விட்டது. உடனே எனக்குத் தீவிர மாரடைப்பு வந்து அதே மருத்துவமனையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டு 90 சதவீதம் அடைப்பு உள்ளது. இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என மருத்துவர் கூறினார். இருதய அறுவை சிகிச்சை சுமார் எட்டு மணி நேரம் நடைபெற்றது. ஐ.சி.யு.வில் இருந்தபோது அறுவை சிகிச்சை நடந்த மறுநாளே நான் எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டேன். கண் விழித்த போது நான் சொன்ன வார்த்தை கோவிந்தா! கோவிந்தா!! என்றுதான்.

என்னைக் காப்பாற்றியது சாட்சாத் அந்த ஏழு மலை மீது வாசம் செய்து கொண்டிருக்கும் வேங்கடவன்தான்.

2024 ஆம் ஆண்டு டயாபடிக் அல்சர் அறுவை சிகிச்சை செய்தார்கள்.கிட்டதிட்ட 15 நாட்கள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டேன். என்னால் மூன்று மாதங்கள் நடக்க முடியவில்லை. படுக்கையிலே இருக்க வேண்டியதாயிற்று. திருப்பதி பெருமாளுக்கு வெள்ளியால் கால் செய்து உண்டியலில் போட்டேன். அடுத்த வினாடியே என்னுடைய கால் புண் சரியாகி விட்டது. நான் நன்றாக நடக்க ஆரம்பித்து விட்டேன்.

என்னுடைய வாழ்க்கையில் நான் பல கஷ்டங்களை அனுபவித்து விட்டேன். மேற்கண்ட மூன்று கண்டங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றி தற்பொழுது நான் நல்ல முறையில் வாழ்வதற்கு அந்தத் திருவேங்கடவன் அருள்–மகிமையே காரணம்.

பகவான் நல்லவர்களைச் சோதிப்பார். ஆனால் கைவிட மாட்டார் என்பதற்கு என் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவங்களே சாட்சிகள்தான்.



# திருவேங்கடவனின் திருவருள்

**– திரு.ரவிசந்திரன், சிதம்பரம்,**
**99424 25357**

# புண்ணியம் தரும் ஆஞ்சநேயர் வழிபாடு

வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் அனுமனுக்கு முக்கிய வழிபாட்டு தினங்கள் ஆகும். கிரக தோஷமுள்ளவர்கள் புரட்டாசி சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வழிபட்டால் சனியின் பிடியிலிருந்து நம்மைக் காப்பாற்றுவார். ஆஞ்சநேயரை வழிபட்டால் சிவனையும், பெருமாளையும் சேர்த்து வழிபட்ட புண்ணியம் கிட்டும்.

அனுமனுக்கு வெண்ணெய்க் காப்பு சார்த்தி வழிபடுவதனால் வாழ்வில் ஏற்பட்ட கஷ்டங்கள் யாவும் வெண்ணெய் உருகுவது போல் உருகி விடும். வெற்றிலையை மாலையாகக் கட்டி அணிவித்து சனிக்கிழமை அனுமத் கவசம் படித்து வந்தால் சத்ரு பயம் நீங்கி நலம் பல பெறலாம்.

அனுமனுக்கு திராட்சைப் பழம் பிரியமானது. வெற்றி கிடைத்திட திராட்சைப் பழம் படைத்து வழிபட வேண்டும். அனுமனுக்குச் செந்தூரம் பூசி, வடை மாலையோடு ஸ்ரீராமஜெயம் எழுதிய காகித மாலையும் அணிவித்து அனுமனின் அருள் பெறலாம்.

அனுமனுக்குத் துளசி மாலை சார்த்தி வழிபட்டால் சனீஸ்வரனின் பாதிப்புகளில் இருந்து விடுபடலாம். அனுமனை வணங்குவதால் புத்தி, பலம், புகழ், அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம் ஆகியவற்றைப் பெறலாம்.

திருமணத் தடை நீங்க அனுமனுக்கு வியாழன் அன்று வெற்றிலை மாலை சார்த்துவதும், புதியதாக துவங்கிய வேலைகளில் தடை நீங்க வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் எலுமிச்சை மற்றும் வடைமாலை சார்த்துவதும் நன்மை பயக்கும்.

பறந்துச் செல்லும் அனுமன் படத்தை வாங்கி பூஜை செய்வது, விரதம் இருந்து, அவரின் வால் பகுதியில் ஒரு மண்டல காலம், ஒவ்வொரு நாளும் சந்தனமும், அதன் மேல் குங்குமமும் வைத்து அனுமன் கவசம் பாடி வழிபட்டால் திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக நடைபெறும். தடைகள், குடும்பப் பிரச்சனைகள் அகலும்.

யோகபலம் பெற்ற நாளில் பொட்டு வைக்கத் தொடங்க வேண்டும். வாலில் பொட்டு வைத்தால், நம் வாழ்க்கைப் பிரச்சனை தீரும் என்பதை அனுபவத்தில் கண்டு கொள்வீர்கள். வாலின் சக்தியை இலங்கையில் காண்பித்தவர் அனுமன். அவரது வாலில் கீழிருந்து மேலாக பொட்டு வைத்தால்தான் வெற்றி கிட்டும்.

ஒரு முறை இராமபிரானுக்கே, அனுமன் தனது வாலை சுற்றி வைத்து கோட்டை போல எழுப்பி, பாதுகாப்பு அளித்ததாகப் புராணங்கள் சொல்கின்றன.

அனுமனின் பலம் அனைத்தும் வாலில் இருப்பதாக ஐதீகம். எனவே அந்த வாலைத் தொட்டு வழிபட்டு வந்தால் நாளும் நன்மை கிடைக்கும்.



**– திரு.ஜி.வேலாயுதம், சேலம்.**
**98437 50345**

# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

அக்காலத்தில் வேங்கடமலை *“மாறி மாறாத தண்ணம் மலை”* (திருவாய். 4.5.11) என்கிறபடி மழை ஓயாமல் பெய்து கொண்டிருந்தபடியாலும், *“குளிரருவி வேங்கடம்”* (நாச்.திரு.8.3) என்கிறபடி குளிர் அதிகமாக இருந்தபடியாலும் அந்த சிஷ்யர்கள் கோஷ்டியில் யாரும் திருமலையில் அக்கைங்கர்யத்தை நிர்வஹிக்க முன் வரவில்லை.

அப்போது அநந்தாழ்வான் ஆசார்ய ஸம்பந்தமே சிஷ்யர்களுக்குப் பரமோபாதேயம் (நன்மை பயக்கக் கூடியது) என்று அதனைத் தவறாமல் அனுஷ்டிக்கக் கடவது என்று உறுதியான மனத்தை உடையவராய், “ஸ்வாமி, தேவரீர் கட்டளையிட்டால் அடியேன் அக்கைங்கர்யத்தை நிர்வஹிக்கக் கடவன்” என்று பிரார்த்தித்தார்.

அந்த மஹானின் தைர்யத்துக்கு, அசைக்க முடியாத உறுதிப்பாட்டுக்கு மிக்க அன்பராய் எம்பெருமானார், “இந்த கோஷ்டியில் ‘நீ ஒருவனே புருஷன்’ அதாவது “ஆண்பிள்ளை” என்று அவரைப் புருஷ பதத்தோடு விளித்தார். பிறகு அந்தக் கைங்கர்யத்தை நடத்துவதற்காக அநந்தாழ்வார் தன் தேவியரோடு திருமலைக்கு எழுந்தருளி அங்கு தோட்டத்தை அமைத்து ஒரு பெரிய தடாகத்தை (ஏரியை) சுயமாகவே தோண்டி, அதை அமைக்கும் தருணத்தில் திருவேங்கடமுடையான் பிரம்மசாரி சிறுவனாக அங்கு வந்து, அநந்தாழ்வாருடைய தேவிகள் (பத்நி) மண்ணைச் சுமப்பதில் தானும் ஈடுபட்டான். மண்ணைச் சுமந்துவரும் தன் தேவி முன்னை விட வேகமாக வருவதைக் கண்டு அதற்கான காரணத்தைத் தன் தேவியிடம் கேட்க, அவர்தம் தேவிகள் உள்ளபடி நடப்பதைத் தெரிவித்தாள்.

தான் செய்யும் கைங்கர்யத்தில் யாரும் பங்கு கொள்ள விரும்பாத அநந்தாழ்வார் தன்னுடைய கையிலிருந்த கடப்பாறையை அச்சிறுவன் மீது வீசி எறிய அவனைப் பின் தொடர்ந்தார். அச்சிறுவன் அவருக்கு அகப்படாமல் தன்னுடைய கோபுரம் வரை ஓடவே இனி நம்மால் முடியாதென்று கடப்பாறையை வீசி எறிந்தார். அதனால் கடப்பாறையால் காயம் அச்சிறுவனின் மோவாயில் ஏற்பட்டது. சிறுவனும் மறைந்தான்.

அன்றைய தினம் மாலை எப்பொழுதும் போல் அநந்தாழ்வார் எம்பெருமானுக்குப் புஷ்ப கைங்கர்யத்தைச் செய்யப் புக, எம்பெருமானின் மோவாயிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டு, பயந்த மனத்தவரான அநந்தாழ்வாருக்கு எம்பெருமான் அர்ச்சகர் மூலமாகத் தனக்கு (எம்பெருமான்) அப்படிப்பட்ட விருப்பத்தாலேயே தானே அவ்வாறு செய்ததாகத் தெரிவித்து, அந்தக் காயத்திற்கு அதன் மேல் பச்சைக் கற்பூரப் பொடியை






**கரிவரததராஜ ஸ்வாமி ,சத்திரவாடா, நகரி**

**கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்ததால் "ஶ்ரீகரிவரத ராஜ ஸ்வாமி" என்றே இந்தப் பகுதியில் பூஜிக்கப்பட்டு வருகின்றார். இவ்வாலயத்தில் ஸ்வாமி மேற்கு திசையை நோக்கி கொலு வீற்றிருக்கின்றார். இந்த ஆலயத்தின் உள்ளே ஶ்ரீவீர ஆஞ்சனேய ஸ்வாமி, ஆழ்வார்கள் வீற்றிருக்கின்றனர்.**

**இவ்வாலயத்தில் 165 ஆண்டுகளாக சித்திராபௌர்ணமி அன்று கஜேந்திர மோக்ஷ உற்சவம் மிக வைபவமாக நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 12ஆம் தேதி அன்று இரவு கஜேந்திர மோக்ஷ உத்ஸவம் நடைபெறும்.**

ஒவ்வொரு நாளும் வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இவ்வித மாக ஒவ்வொரு நாளும் மோவாயின் தழும்பில் பச்சைக்கற்பூரப் பொடி இன்று வரை ஸமர்ப்பிக்கப்படுகிறது.

தான் நிருமாணித்த அப்பெரிய ஏரியின் அருகில் அழகிய பூந்தோட்டத்தை அமைத்து, அநந்தாழ்வார் அதற்கு எம்பெருமானாரின் திருநாமத்தைச் சாத்தி "ராமாநுஜ புஷ்கரணி" என்று பெயரிட்டார்.

எம்பெருமானுக்குப் புஷ்ப கைங்கர்யம் எந்தவிதத் தடையும் இன்றிச் செவ்வனே செய்து வரும் காலத்தில், சிறிது காலங்கழித்து மீண்டும் திருவேங்கடமுடையான் அநந்தாழ்வார் மீது வாத்ஸல்ய குணம் அதிகரித்து தேவிகளுடன் அத்தோட்டத்தில் சில இரவுகள் யதேச்சையாக உலாவி வந்து அங்கிருந்த பூக்களைக் கொய்து, மரங்களை வெட்டி, வனத்தைப் பாழ்படுத்தினான். முன்னை விட பூக்கள் மிகக் குறைவாக இருப்பதைக் கண்ணுற்று, அதற்கு உண் டான காரணத்தை அறிய ஆவல் கொண்டவராய், தானே சுயமாக ஒரு நாளிரவு விழித்திருக்க, எதிர்பார்த்த விதமாக உலாவுகின்ற அத் திவ்ய தம்பதிகளைப் பார்த்த அநந்தாழ்வார் வேகமாக அவர்களைப் பிடிக்கப் போனார். அப்போது ஆண் வடிவத்திலிருந்த எம்பெருமான் அவரைப் பார்த்து பயப்படுகிறவனைப் போல நடித்து ஓடினான். அபலையாய், வேகமாக நடக்க முடியாதவளாயிருக்கும் பெண் வடிவத்தில் இருக்கும் பத்மாவதித் தாயார் அநந்தாழ்வாரிடம் அகப்பட்டுக் கொண்டாளாகையால் அநந்தாழ்வார் அத்தாயாரைத் தோட்டத்திலுள்ள சம்பக மரத்தில் கட்டி வைத்தார். அவளும் பயப் படுபவள் போல் அநந்தாழ்வாரை அன்போடு "அப்பா" என்று அழைத்ததால் அநந்தாழ்வாரும் பெற்ற மகளைப்போல் லக்ஷ்மி வடிவான பத்மாவதித் தேவியை எல்லாரும் அறியுமாறு, அவளை அழைத்துக் கொண்டு, ஶ்ரீநிவாஸனுடைய கோயிலை அடைந்து, தன்னை எம்பெருமானை மன்னிக்க வேண்டி, அவளைக் கொள்ள வேண்டும் என்று எம்பெருமானைப் பிரார்த்தித்த, அடுத்த கணமே பத்மாவதித் தாயார் ஶ்ரீநிவாஸனுடைய திருமார்பை அடைந்தாள்.

அக்காட்சியை ஸேவித்த அநந்தாழ்வார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பத்மாவதி தேவியைத் தன் மகளாக ஏற்றுக் கொண்ட படியால் அன்று முதல் அநந்தாழ்வார் "மலையில் வேங்கடவர்க்கு மாமனார்" என்ற புகழைப் பெற்றார். இவ்விஷயம் இரண்டு, எட்டாவது சுலோகங்களிலும் பின்பற்றப்படுகிறது. "ஹ்ருதயரங்கக" என்ற விளியை உள்ளபடி எப்படியாயினும் அந்வயப்படுத்திக் கொள்ளலாமென்று வியாக்கியான கர்த்தா காட்டியுள்ளார்.

*இன்னும் ஜ்வலிக்கும்...*

## ஸப்தகிரிக்கு சிறப்புக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன...

**திருமலை பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு சிறப்புக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள் மிகத் துல்லியமாகவும், சுருக்க மாகவும், தகுந்த சான்றுகளுடன் அமையும்படி எழுத்து மூலமாகவோ, தட்டச்சு செய்தோ கீழ்க்காணும் முகவரிக்கு தபால் வாயிலாக அனுப்பவும். தேர்வு குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் மட்டுமே ஸப்தகிரி இதழில் பிரசுரிக்கப்படும்.**

**திருமலை, திருவேங்கடவன் குறித்து அரிய கட்டுரைகள் அதாவது திருமலை கல்வெட்டுகள் காட்டும் நன்கொடைகள், திருமலையில் பின்பற்றப்படும் ஆகம விதிமுறைகள், திருமலை நிர்வாகத்தில் அரசர்களின் பங்கு, புராணங்கள் போற்றும் திருமலை, திருமலையில் ஆங்கிலேயர் கால திட்டங்கள், ஆழ்வார்கள் கண்ட திருமலை, திருமலைக்கு வைணவ ஆசார்யர்களின் தொண்டு போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

**எங்கள் முகவரி :**


பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 9443171383

இலங்காபதியின் இளைய மகனான அட்சய குமாரன் வதைப் படலத்தில் ஸ்ரீநரசிம்ம மூர்த்தி போல் உக்கிர மூர்த்தியாக எழுந்தருளி தனது வால் படையால் அட்சயக் குமாரனை இறுகப் பற்றி அவனைத் தனது கரங்களால் (கரப்படைகளால்) வதம் செய்யும் ஸ்ரீஜெயவீர மாருதி பகவானான அனுமனின் சிறப்பு.

**கம்ப இராமாயண இதிகாசம்**

சுந்தர காண்டத்தில் இராமபிரானின் ஆணைப் படி அன்னை சீதா தேவியைத் தேடி வரும் அனுமன் அசோக வனத்தில் மலர்ந்த மலர்களிடையே வாடிய மலராக சீதா தேவியைக் கண்டதும், அனுமன் அவரிடம் சென்று தான் இராமனின் தூதுவன் என்று எடுத்துரைக்க, அகம் மகிழ்ந்த அன்னை சூளாமணி (கணையாழி) ஒன்றைத் தந்து அதனை தனது நாயகனிடம் தருமாறு பணித்தாள். அதனைப் பெற்றுக் கொண்டு புறப்பட்ட அனுமன் அதற்கு முன் இராம தூதனாக இலங்காதிபதிக்கு தனது கோபத்தைக் காட்ட முடிவு செய்தான்.

அதனை கலகமாக செய்ய நினைத்து அசோக வனத்திலுள்ள மரங்களை வீசி எறிந்து சிங்க கர்ஜனை செய்ய, அதனை அப்பகுதியைக் காவல் காத்து வரும் காலதேவர்கள் இராவணனிடம் முறையிட, உடனே அவன் தன் படையில் உள்ள கிங்கரர் என்று பெயர் படைத்த 80,000 அரக்கர் களை அனுப்பி வைத்தான். அனுமன் அவர்களைக் கொன்று குவிக்க, அதனைத் தொடர்ந்து சம்புமாலி எனும் பேரரக்கன் போர்க்களம் வர, அவனும் அனுமனால் கொல்லப்பட்டான் என்ற செய்தியை கால தேவர்கள் விரைந்து சென்று இராவணனிடம் தெரிவித்தனர். இதனைக் கேட்ட இராவணன் தனது படைகளுக்குத் தலைவர்களாய் இருக்கும் விரு பாட்சன், யூபாட்சன், துர்த்தரன், ப்ரகஸன், பாஸ கர்ணன் எனப் பெயர் கொண்ட பஞ்ச சேனாபதிகள் வசம் அனுமனைப் பிடித்து வர உத்தரவு பிறப்பித் தான். அவர்களையும் அனுமன் வதம் செய்தான்.

இச்செய்தியை அறிந்த இலங்காபதி இராவண னின் மனத்துயரைப் போக்கும் வண்ணம் அவனின் இளைய மகனான அட்சயக் குமாரன் தான் சென்று அந்த வானரத்தை வதம் செய்து வருகிறேன் என்று படைகள் சூழ வனத்திற்கு வந்தான்.

களத்தில் தனி ஒருவனாக கலகம் விளைவித்து வந்த அனுமனைக் கண்டதும், கண்களில் கோபம் தீயாய் பரவ பல வித ஆயுதங்கள் கொண்டு மிக உக்கிரமாய் அனுமனைத் தாக்க, அத்தனை படை களையும் விரைவில் அழித்தான் அனுமன். நிறை வில் ஆயுதங்கள் இன்றி நின்ற அட்சயக் குமாரன் மற்போர் செய்யக் கருதி தனது கரங்களால் அனுமனை இறுகப் பற்ற, அனுமனும் அட்சயக் குமாரன் உடல் நிமிராத வகையில், தன் வாலால் சுற்றி இறுக்கிக் கொண்டு அவனின் கன்னத்தில் அறைந்து, குடல் வெளி வரும் வரை தனது கரங்களால் துவைத்து வதம் செய்தான் என்பதும், அதனைத் தொடர்ந்து வந்த இராவணனின் மூத்த மகனான இந்திரசித் ஏவிய பிரம்மாஸ்த்திரத்தால் கட்டப்பட்டு நிறைவில் இராவணனின் முன் வால் கோட்டை அமைத்து இராமதூதனாக உயர்ந்து நின்றான் அனுமன் என்பதும் கம்பராமாயணம் எடுத்துரைக்கும் வரலாற்றுப் பதிவாகும். இவ்வரலாற்றுச் சுவடைத் தாங்கி நிற்கும் மிக அரிதான வகையில் மேற்கண்ட தூண் சிற்பம் கோவை பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்திலுள்ளது குறிப்பிடத்தக்கது.



पाठ : पञ्चत्रिंशः

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-35

धातवः செயல்கள் ‘अस्’ இருப்பது/நிற்பது

| वर्तमानः | भूतः | आशीराद्यर्थकः | विध्याद्यर्थकः | भविष्यत्कालः |
|---|---|---|---|---|
| ए ब | ए ब | ए ब | प्र स्यात् - स्युः | ‘अस्’ इति |
| प्र अस्ति-सन्ति | आसीत् आसन् | अस्तु-सन्तु | म स्याः - स्यात | धातोः ‘भू’ |
| असि-स्थ | आसीः- आस्त | एधि-स्त | उ स्याम्-स्याम | धातोः |
| उ अस्मि-स्मः | आसम्-आस्म | असानि-असाम | | भविष्यत्कालः एव न तु अन्यः। |

कृ செய்வது

| वर्तमानः | भूतः | आशीराद्यर्थकः |
|---|---|---|
| प्र करोति - कुर्वन्ति | अकरोत्-अकुर्वन् | करोतु - कुर्वन्तु |
| म करोषि - कुरुथ | अकरोः - अकुरुत | कुरु - कुरुत |
| उ करोमि - कुर्मः | अकरवम् - अकुर्म | करवाणि - करवाम |

| विध्याद्यर्थकः | भविष्यत्कालः |
|---|---|
| प्र कुर्यात् - कुर्युः | प्र करिष्यति - करिष्यन्ति |
| म कुर्याः - कुर्यात | म करिष्यसि - करिष्यथ |
| उ कुर्याम - कुर्याम | उ करिष्यामि - करिष्यामः |


यु நிற்பது / இருப்பது

| वर्तमानः | भूतः | आशीराद्यर्थकः |
|---|---|---|
| प्र भवति - भवन्ति | अभवत् - अभवन् | भवतु - भवन्तु |
| म भवसि - भवथ | अभवः - अभवत | भव - भवत |
| उ भवामि - भवामः | अभवम् - अभवाम | भवानि - भवाम |

| विध्यद्यर्थकः | भविष्यत्कालः | |
|---|---|---|
| प्र भवेत् - भवेयुः | भविष्यति - भविष्यन्ति | अधः लिखिताः धातवः प्रायः ‘भू’ धातुरिव भवन्ति। |
| म भवेः - भवेत | भविष्यसि - भविष्यथ | |
| उ भवेयम् - भवेम | भविष्यामि - भविष्यामः | |

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

# குறுக்கெழுத்துப் புதிர் -106



### இடமிருந்து வலம்

1. அள்ள அள்ளக் குறையாதது...(5)
7. கழுகரசன்...(3) சம்பாதியின் தம்பி.
9. குருக்ஷேத்திரப்போரை திருதராஷ்டிரனுக்கு தன் ஞானக்கண்களால் கண்டு கூறியவர்...(5)
18. கிருஷ்ணரின் அண்ணன்...(5)
21. கர்ணனின் முற்பிறவிப் பெயர்...(5)

### வலமிருந்து இடம்

04. அசோகவனத்தில் சீதைக்கு ஆதரவாக இருந்த அசுரகுலப் பெண்...(4)
11. தருமபுத்திரரின் கொடியில் இருப்பது...(3)
17. சூரியனின் தேரோட்டியான அருணனின் தம்பி...(4)

### மேலிருந்து கீழ்

01. சிவனை நோக்கித் தவம் புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்றவன்...(6)
02. கர்ணனின் தேரோட்டி...(5)
03. இராமபிரானுக்கு ஆதித்ய ஹிருதயம் போதித்தவர்...(6)
05. சுக்கிரீவனின் தந்தை பெயர்...(4)
06. அக்ஞாத வாசம் முடிந்ததும் பாண்டவர்களுக்காக துரியோதனனிடம் திரும்ப நாட்டைக் கேட்டு முதலில் தூது சென்றவர்...(8)
08. திருமகளின் மணாளன்...(4)
10. மகாலக்ஷ்மியின் சகோதரன்...(8)
12. வானரவீரன் வாலியின் நாடு...(5)
15. பரந்தாமன் பள்ளி கொண்டு இருப்பது...(5)
16. அர்ச்சுனனின் கொடியில் இருப்பவர்...(4)

### கீழிருந்து மேல்

08. பாண்டவர் பத்தினி...(4)
13. தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது அமிர்த கலசத்துடன் தோன்றியவர்...(6)
14. திருமாலின் பெயர்களுள் ஒன்று...(6)
15. கிருஷ்ணரின் சங்கு...(7)
16. துரியோதனன் கொடியில் இருப்பது...(4)
19. கண்ண பெருமான் அவதரித்த நட்சத்திரம்...(3)
20. தேவகியின் அண்ணன்...(4)
22. இராமாயணம் எழுதிய வால்மீகியின் இயற்பெயர்...(6)

**தொகுப்பு : திருமதி இராஜகுமாரி, ஆரணி, 99762 38430.**

புதிருக்கு விடை அறிய 43ம் பக்கம் பார்க்கவும்...

**திருமலையில் பக்தர்களின் கவனத்திற்கு...**

- தண்ணீர் குழாய்களைத் திறந்துவிட்டுச் செல்லாதீர்கள்.
- உணவு மற்றும் தண்ணீரை வீணாக்காதீர்.
- அறையை விட்டு வெளியே செல்லும் முன் மின் சாதனங்களை அனைத்து விட்டுச் செல்லவும்.
- பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாதீர்.
- திருமலையைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.
- குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போடவும்.
- பொது இடங்களில் சிறுநீர் கழிப்பது, எச்சில் துப்புவது போன்ற செயல்களைச் செய்யாதீர்கள்.

# ஸ்ரீராமதிவாகரரும் ஸ்ரீராமாநுஜதிவாகரரும்





சூரிய வம்சத்தில் வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய் தோன்றியவர் இராமதிவாகரர். சுந்தரகாண்டத்தில் இராமதிவாகரர் என்றுள்ளதால் ஸ்ரீராமர் சூரியனென்பது மிகப் பிரசித்தம். அம்புகளாகிற கிரணங்களால் விரோதி ராக்ஷச கூட்டமான சமுத்திரத்தை வற்றப் பண்ணியவன் ஸ்ரீராம திவாகரன் என்கிறது ஸ்ரீமத்ராமாயணம்.

கலியிருள் நெருங்கியிருக்கிற காலத்தில் பிரபந்த குலத்தில் பால சூரியனையொத்த சிவந்த திருமேனியோடு அவதரித்தவர் “இராமாநுஜதிவாகரர்”. புண்யமாகிற தாமரை மலர் மலர்வதற்காகவும், பாவமாகிற இருள் தொலைவதற்காகவும் ஸ்ரீமானான இராமாநுஜன் என்கிற சூரியன் அவதரித்தார். இராமாநுஜ ராகிய சூரியன் பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய தாமரைகளை மலரச் செய்தார் என்று மணவாள மாமுனிகள் தன் யதிராஜா விம்ஸதியில் **‘‘ஸ்ரீபட்டநாத பாகால முகாப்ஜ மித்ரம்’’** என்று அருளிச் செய்து இராமாநுஜரை சூரியனோடு ஒப்பிடுகிறார். ***“எண்திசைக்கும் விளக்காகி நிற்பார் இணையடி என் தலைமேலனவே”*** (பெரியாழ்வார் திருமொழி 2–9–11) என்கிறபடி விஷ்ணு பக்தராகிய இராமாநுஜதிவாகரர் முன்னிலையில் வெளியிருளோடு (அறியாமையாகிற) உள்ளிருளும் அழிந்துவிடும் எனத் தெளிவாகிறது.

## பாணயுத்தமும் - வாதயுத்தமும்

இராம–இராவண யுத்தத்தின் போது இராவணனது போர்த் திறனை ரசித்துக் கொண்டே “இப்போதாவது இவன் நம்மைச் சரண் புகுந்து வாழ்ந்து போகானோ” எனும் எதிர்பார்ப்புடன் போரிட்டார் இராமர். ஸ்ரீராமாநுஜரும் ஒரு அத்வைத வித்வானாக இருந்த யக்ஞ மூர்த்தியுடன் வாதம் புரியும்போது அவரின் வாதத் திறமையை ரசித்து வாதம் புரிந்தாலும் “யக்ஞமூர்த்தி தாமே முன் வந்து விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு உய்ந்து போகானோ” என்று எதிர்பார்ப்புடன் வாதத்தை நீடித்துக் கொண்டே வந்தார்.

இராம–இராவண யுத்தத்தின் கடைசியில் இராமரின் தேர்ப்பாகன் இராமனின் அவதார காரியத்தை நினைவுறுத்தி இராவணனை அழிக்கச் செய்தது போல, இராமாநுஜரின் கனவில் காஞ்சி பேரருளாளன் (வரதர்) எழுந்தருளி ***‘‘இளையாழ்வீர் நீர் உம்முடைய ஆசாரியரான ஆழ்வார்***



அருளிச்செய்த மாயாவாத கண்டனத்தைச் சொல்லி யக்ஞ மூர்த்தியை வெல்லும்'' என்று அருளியபடியால் அவ்வாறே செய்து யக்ஞ மூர்த்தியை வென்றார் இராமாநுஜர்.

## பதினான்காயிரம் ராட்சசர்களும் - பன்னீராயிரம் ஜைநர்களும்

சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு தன் அண்ணன் கரனிடம் இராம, இலட்சுமணரைப் பற்றிக் கூறியவுடன், பதினான்காயிரம் சேனைகளை ஸ்ரீராமனோடு போர் புரிய அனுப்பினான். இராமரும் தான் ஒருவனே நின்று அத்தனை அரக்கர்களையும் வென்றார்.



அதுபோல இராமாநுஜர் தொண்டனூருக்கு எழுந்தருளி அந்த தேசத்து அரசன் விட்டல தேவ ராயன் என்கிற ஜைனனைத் திருத்திப் பணி கொண்டு பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்வித்து அவனை ஸ்ரீவைஷ்ணவனாக்கி விஷ்ணுவர்த்த ராயன் என்று திருநாமம் சாத்த, அவனைச் சார்ந்த ஜைன பிட்சுக்கள் தம் சிஷ்யனை இவர் எப்படியோ மயக்கித் தம் வசப்படுத்திக் கொண்டு விட்டாரே என்று ஆத்திரம் கொண்டு இராமாநுஜரிடம், "எங்களுடன் நீவீர் வாதம் செய்து ஜெயித்தால்தான் எமது சீடனான இந்த அரசனை உமது சிஷ்யனாக்கி கொள்ளல் தகும். எனவே எம்முடன் வாதம் புரிய வருவீராக" என்று கூற, இராமாநுஜரும் அதற்கு இசைந்தார்.

ஒரே நேரத்தில் பன்னீராயிரம் ஜைநர்கள் இவரைச் சூழ்ந்து கொண்டு பலவாராக தர்க்கிக்கத் தொடங்கினர். ஒரே சமயத்தில் இத்தனை பேரின் பலவகை வாதங்களுக்கு விடை அளிக்கத் தம்முன் திரை போட்டுக் கொண்டு,தன் நிஜரூபமான ஆதிசேஷ வடிவை எடுத்துக் கொண்டு ஏக காலத்தில் அனைவருக்கும் விடை அளித்து ஜைநர்களின் குயக்தி வாதங்களைப் பொசுக்கி எதிரம்பு கோத்தவர்களுக்கும் நண்ணரு ஞானத்திரை நல்கி அவர்களை நாராயணனின் அருளுக்கு ஆளாக்கினார் இராமாநுஜ திவாகரர்.



## ஜடாயு மோட்சமும் - இடைச்சி மோட்சமும்


இலக்ஷ்மணனோடு கூடிய ஸ்ரீராமன் பிராட்டியைத் தேடுவதன் பொருட்டு எல்லா இடங்களிலும் அலைந்து தேடித் திரியும் போது வழியில் குற்றுயிராய் விழுந்திருந்த ஜடாயுவைக் கண்டார்கள். இராவணனுடன் யுத்தம் செய்து பிராட்டியைக் காப்பாற்ற முடியாமல் போனது பற்றிக் கூறி ஜடாயு உயிர் விட்டதை பார்த்த ஸ்ரீராமன் என் பொருட்டு இக்கழுகு உயிரிழந்திருக்கிறது. என் தந்தையைப் போல இப்பக்ஷி ராஜனும் என்னால் பூஜிக்கத் தகுந்தவர் என்றெண்ணி மந்திரப்பூர்வமாகத் தகனம் செய்தார். அடுத்த நிமிடமே ஜடாயு மோட்சம் அடைந்தார்.




ஸ்ரீராமாநுஜர் திருமலைக்கு எழுந்தருளியிருந்த போது தும்பையூர் கொண்டி என்னும் இடைச்சி, மடத்திற்கு தினந்தோறும் தயிர் கொடுத்து வந்தாள். இராமாநுஜர் திருமலையை விட்டுப் புறப்படும் முன்னர் தயிர் கொடுப்பதற்கு பணம் வேண்டாம். மோட்சத்தை அளிப்பீராக என்று விண்ணப்பித்தாள்.

திருவேங்கடமுடையான் அன்றோ மோட்சத்தை அளிப்பவன் என்று கூறினார் இராமாநுஜர். உடனே அப்பெண்ணும் அடியேனுக்கு மோட்சம்

அளிக்கும்படி திருவேங்கடமுடையானுக்கு தேவரீர் ஒரு சிறு சீட்டு (முறி) எழுதித்தர வேண்டினாள். உடையவரும் அவ்வாறே தர, அதைப் பெற்றுக் கொண்டு திருவேங்கடமுடையான் சந்நதிக்குச் சென்று துவஜஸ்தம்பத்தின் முன்பு அச்சிறுமுறியை வைத்து வணங்கிட, அன்றைய தினமே வீடு பேற்றினை அடைந்தாள் அம்மூதாட்டி.



இராமாவதாரத்தில் இலட்சுமணன் இராமருக்கு எல்லா கைங்கர்யங்களும் செய்து வந்தார். இப்படி இளைய பெருமாளாக ஓருருக்கொண்டு அனைத்து கைங்கர்யங்களையும் செய்த ஆதிசேஷனுக்கு ப்ரத்யுபகாரம் பண்ண வேண்டும் என்று எண்ணிய பெருமாள், ஆதிசேஷன் கலியுகத்தில் இராமாநுஜராக அவதரித்தபோது தாம் ஈருருக்கொண்டு முதலியாண்டானாகவும், கூரத்தாழ்வானாகவும் அவதரித்து இராமாநுஜ திவாகரருக்கு கைங்கர்யம் செய்தான். ஆக, இராமதிவாகரரை விட இராமாநுஜ திவாகரருக்குப் பெருமை அதிகம்.



வகுலபூஷண பாஸ்கரரான நம்மாழ்வார் திருவாய் மொழியை இயற்றினார். உலகில் இதை ப்ரசாரப்படுத்தினார் ஸ்ரீராமாநுஜர். அக்காலத்தில் அவ்வளவு சிரத்தை கொண்டருளியிராவிடில் திவ்யப் பிரபந்தங்கள் ஸ்ரீமந் நாதமுனிகளின் காலத்திற்கு முன்னேயிருந்த விதமாகவே மறைந்திருக்கும். மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்ததால் திருவாய்மொழியைப் பெற்ற தாயான வகுல பூஷண பாஸ்கரரை விட வளர்த்த தாயான இராமாநுஜ திவாகரர் உயர்ந்தவர் எனக் கூறுகிறோம்.


கவிம்லோக திவாகரரான திருமங்கை ஆழ்வார் அருளிய பெரிய திருமொழி யஜுர் வேத தாரணம் போன்று மிகவும் கடினமானது. பெரிய திருமொழி நம் நெஞ்சில் தங்க வேண்டும் என்றால் அதற்கு ஸ்ரீராமாநுஜரின் அருள் வேண்டும்.



எம்பார் அருளிச் செய்தது எங்கள் கதியே! இராமாநுஜ முனியே
சங்கை கெடுத்தாண்ட தவராசா - பொங்குபுகழ்
மங்கையர் கோனீந்த மறையாயிர மனைத்தும்
தங்குமனம் நீ யெனக்குத்தா

என்று தனியன் அமைந்துள்ளதால் கவிம்லோக திவாகரரை விடவும். இராமாநுஜ திவாகரர் ஒப்பற்றவர்.

இராமதிவாகரர் பகவத் கோஷ்டியைச் சேர்ந்தவர். வகுல பூஷண பாஸ்கரரும், கலிம்லோக திவாகரரும் ஆழ்வார்கள் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இராமாநுஜ திவாகரரோ ஆசார்ய கோஷ்டியைச் சேர்ந்தவர். ஆக, பகவானாகிற தத்துவத்தை விட, அவனைக் காட்டித் தரும் ஆழ்வார்கள் உயர்ந்தவர்கள். ஆழ்வார்கள், பகவானைக் காட்டித்தரினும் அவனைக் காண ஆவல் இல்லாத நமக்கு தன் கருணையினாலே ஆழ்வார்களின் பாசுரம் கொண்டு நாம் உய்வடையும் வண்ணம் அவனிடத்தில் நம்மை சேர்ப்பிக்கும் ஆசார்யரான இராமாநுஜ திவாகரர் பகவானை விடவும், ஆழ்வார்களை விடவும் உயர்ந்தவர்.



**உய்ய ஒரே வழி உடையவர் திருவடி.**

**- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,**
**அம்பத்தூர், 97909 38928.**





# அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஸ்வாமி திருக்கோயில்

விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் நகரின் மத்தியில் அமைந்துள்ளது இப்பெருங் கோயில். தமிழ் நாட்டின் தென்பகுதியிலிருந்து சென்னை வரும் பேருந்துகள் ஒருங்கிணையும் ஊர் ஆகும். இரயில் வசதிகளும், பேருந்து வசதிகளும் நிறைந்து உள்ள ஊர். இத்திருக்கோயில் பேருந்து மற்றும் இரயில் நிலையத்தில் இருந்து வடக்கே அரை கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

## திருக்கோயில் அமைப்பு

இத்திருக்கோயில் முன் நுழைவு வாயில் பல்லவ காலத்தைச் சார்ந்த அழகிய ஐந்து நிலை இராஜகோபுரம் பரந்த அடித்தளத்துடன் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இராஜகோபுரத்தைக் கடந்து சென்றால் நெடிய கொடிமரம் உள்ளது. அதை அடுத்து மகா மண்டபமும், மகா மண்டபத்தின் இடது புறம் உடையவர் சன்னதியும், சக்கரத்தாழ்வார் சன்னதியும் உள்ளது. மகா மண்டபத்தின் வலது புறம் யாகசாலை, கோதண்ட ராமர் மற்றும் வேணு கோபாலன் சன்னதியும் உள்ளது. மகா மண்டபத்தைக் கடந்து சென்றால் கர்ப கிருகத்தில் நரசிம்ம மூர்த்தி, இடது தொடையில் இலட்சுமி தேவியுடன் அமர்ந்த நிலையில் திருக்காட்சி தருகிறார்.

மேலும், திருக்கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் தாயார் சன்னதி தனிக் கோயிலாக உள்ளது. திருக்கோயிலின் வடமேற்கில் ஆண்டாள் சன்னதியும் உள்ளது. பின்புறம் ஆஞ்சநேயர் சன்னதி அமைந்துள்ளது.

## தல வரலாறு

முற்காலத்தில் இப்பகுதி புளிய மரக்காடுகளாக இருந்தது. வடமொழியில் திந்திருணி என்பது புளிய மரங்களைக் குறிக்கும். எனவே திந்திருணி வனம் என்பது மருவி திண்டிவனம் என வழக்கில் உள்ளது. இத்தலம் காஞ்சி க்ஷேத்திரத்தைச் சார்ந்தது. பிரம்மா காஞ்சிபுரத்தில் யாகம் செய்த போது யாக வாசல்கள் வனத்தையம், புரத்வயம் என்ற நான்கு திசைகளுக்கும் நான்கு வாயில்கள் நியமித்தார். வனத்தையம் என்பது வடக்கே நாராயணவனம் வடக்கு எல்லையாகவும், தெற்கே திந்திரிணீவனம் தெற்கு எல்லையாகவும், கிழக்கே மகாபலிபுரம் கிழக்கு எல்லையாகவும், மேற்கே விரிஞ்சிபுரம் மேற்கு எல்லையாகவும் இருந்தது.

நரசிம்மரின் உக்கிரத்தைக் குறைக்க தாயார் மூலமாக மார்கண்டேய மகரிஷி வேண்டிக் கொள்ள,

தாயார் பெருமாளை கை கூப்பி பக்தனுக்கு சாந்த மூர்த்தியாகச் சேவை சாதிக்கும்படி வேண்டியதின் பேரில் சாந்தமூர்த்தியாக பிரகலாத வரதனாகக் காட்சி தந்தார். எனவே இத்திருத்தலத்தில் பக்தனுக்காக தாயார் கைகூப்பியவாறு ஸ்ரீநரசிம்ம பெருமாளோடு சேவை சாதிக்கிறாள்.

மேலும், திந்திரிணீவனத்தில் திண்டி, முண்டி, கிங்கிலி, கிலாலி ஆகிய அரக்கர்கள் கொடுஞ்செயல் புரிந்து வனத்தில் தவம் செய்யும் முனிவர்களுக்கு ஓயாத தீங்கு செய்து வந்தனர். முனிவர்கள் ஸ்ரீமந்நாராயணனை வேண்டிட, நாராயணனும் அரக்கர்களை சம்ஹரிக்க அனுமனுக்கு தன் சங்கு சக்கரத்தைக் கொடுத்து போருக்கு அனுப்பி வைத்தார். அனுமன் அவ்வரக்கர்களைக் கொன்று முனிவர்களின் தவ வேள்வி நிறைவு பெற பாதுகாத்தார். அது முதல் அனுமன் சங்கு சக்கரத்தோடு நான்கு திருக்கரங்களோடு இத்தலத்தில் அருள்பாலிக்கிறார்.

இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள உற்சவ மூர்த்தி அனுமன் சங்கு சக்ரதாரியாக சேவை சாதிக்கிறார்.

தீராத வினைகளைத் தீர்த்தருளும் இத்தலப் பெருமாளை தரிசிப்பதால் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு சித்திக்கும். கடன் பிரச்சனை தீரும். வழக்குகளில் வெற்றி உண்டாகும். செவ்வாய் தோஷம் போக்கி சிறந்த திருமண வாழ்க்கையும் அமையப் பெறுகிறது. திருவாதிரை, சுவாதி, சதயம் இம்மூன்று நட்சத்திரக்காரர்களுக்கும், ராகுதிசை நடப்பவர்களுக் கும், ஏழரை சனி நடப்பவர்களுக்கும் இது பரிகாரத்தலமாகும்.

| | | |
|---|---|---|
| ஸ்வாமியின் திருநாமம் | : | ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஸ்வாமி. |
| தாயார் திருநாமம் | : | ஸ்ரீகனகவல்லித் தாயார். |
| நட்சத்திரம், ஆகமம் | : | சுவாதி, வைகானச ஆகமம். |
| விருட்சம் | : | மருதமரம், நெல்லி. |

**திருவிழாக்கள்**

இவ்வாலயத்தில் சித்திரையில் ஆஞ்சநேயருக்கு இலட்ச தீப விழாவும், வைகாசியில் பிரம்மோற்சவப் பெருவிழா 10 நாட்களும், 8ஆம் நாள் திருக்கல்யாண உற்சவமும், 9 ஆம் நாள் திருத்தேர் உற்சவமும் நடைபெறும். ஆனி மாதத்தில் ஜேஷ்டா தேவிக்கு அபிஷேகமும், ஆடியில் பூர உற்சவமும், புரட்டாசியில் ஒன்பது தினங்கள் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் தீபாவளி சிறப்பு அபிஷேகமும் நடைபெறும்.

கார்த்திகையில் விஷ்ணு தீப உற்சவமும், மார்கழியில் திருபட்ஷி அதிகாலையில் வைகுண்ட ஏகாதசி உற்சவமும், அனுமந்த ஜெயந்தி உற்சவமும், கூடார வல்லி உற்சவமும், தை மாதத்தில் சங்கராந்தி பெருவிழாவும், தை அமாவாசையும், இரத சப்தமியும், மாசி மாதத்தில் பங்குனி உத்திரமும், மாசி மக தீர்த்தவாரி உற்சவமும், வைகாசி மாதம் நரசிம்ம ஜெயந்தி விழாவும் வெகு சிறப்பாக நடை பெற்று வருகிறது. இத்திருக்கோயில் இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை ஆளுமைக்கு உட்பட்டது.





**திந்திரிணீவனத்தில் திண்டி, முண்டி, கிங்கிலி, கிலாலி ஆகிய அரக்கர்கள் கொடுஞ்செயல் புரிந்து வனத்தில் தவம் செய்யும் முனிவர்களுக்கு ஓயாத தீங்கு செய்தனர். முனிவர்கள் ஸ்ரீமந்நாராயணனை வேண்டிட, நாராயணனும் அரக்கர்களை சம்ஹரிக்க அனுமனுக்கு தன் சங்கு சக்கரத்தைக் கொடுத்து போருக்கு அனுப்பி வைத்தார். அனுமன் அவ்வரக்கர்களை கொன்று முனிவர்களின் தவ வேள்வி நிறைவு பெறப் பாதுகாத்தார். அது முதல் அனுமன் சங்கு சக்கரத்தோடு நான்கு திருக்கரங்களோடு இத்தலத்தில் அருள்பாலிக்கிறார்.**





மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஸ்வாமியின் மதுரமான வார்த்தைகளை நாங்கள் மெய் மறந்து கேட்டுக்கொண்டிருந்த போதே ஸ்வாமி அர்ச்சை வடிவத்தைத் தாங்கி னார். எங்களோடு உரையாடிக் கொண்டிருந்த ஸ்வாமி மௌனமாகியது எங்களுக்கு வியப்பை உண்டாக்கியது. இக்காட்சிகளை கண்டு களித்த நாங்கள் பிறகு மலையை விட்டு கீழே இறங்கினோம். இருந்தாலும் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறோம். மலைக்குச் சென்றது நாங்கள், அங்கு ஸ்வாமியைத் தரிசித் தது நாங்கள். அங்குள்ள அழகான இயற்கைச் சூழல்கள் அனைத்தையும் அனுபவித்தவர்கள் நாங்கள். இருப்பினும் தாங்கள், நாங்கள் கண்டு அனுபவித்த அக்காட்சிகள் அனைத்தையும் நேரடியாகக் கண்டு களித்தது போல எவ்வாறு உங்களால் சொல்ல முடிந்தது? நீங்கள் சென்று தரிசித்தீர்களா அல்லது மனக்கண்களால் கண்டீர்களா? என முனிவர்கள் வினவினார்கள்.

சூத மகரிஷி, முனிவர்களின் கேள்விக்குப் புன்னகைத்தவாறு “முனிவர்களே! இவையனைத்தும் வியாச முனிவரின் அருளே! அவருடைய அருட்பார்வை யாலே எனக்கு எல்லாம் அனுபவமாகிறது. இவை எல்லாம் என்னுடைய அறிவாற்றல் என்று நினைக்க வேண்டாம். எல்லாம் அவருடைய அருளாசியே! மேலும், வானத்தில் உள்ள விண்மீன்களைக் கணக்கிட்டு விடலாம். பனித்துளிகளைக் கணக்கிடலாம். மணல் துகளையும் கணக்கிடலாம். ஆனால், வேங்கட நாதனின் லீலைகளைக் கணக்கிடுதல் என்பது முடியாத ஒன்று. ஏதோ எனக்குத் தெரிந்த அளவிலே உங்களுக்குக் கூறினேன்” என்று சொல்லி முடித்தார்.

சூத மகரிஷி வராக புராணத்தில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் பெருமை மிகுந்த கதை களை சௌனகாதி முனிவர்களுக்கு விவரித்தார். அதன் பிறகு சௌனகாதி முனிவர்கள்...

“சூத மகரிஷி! பவிஷ்யோத்தர புராணத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பற்றிய கதைகள் மிகவும் விரி வாக உள்ளதாக தாங்கள் கூறியிருந்தீர். நாங்கள் யாவரும் ஸ்வாமியின் அத்திருக்கதைகளைக் கேட்பதற்கு மிகவும் ஆவலாக உள்ளோம். எனவே கருணையோடு அக்கதை களை எங்களுக்குக் கூறுவீராக!” என வேண்டிக் கொண்டனர்.

சூதர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்து, “நீங்கள் கேட்பதில் உண்மை இருக்கிறது. முன்பு ஒருமுறை ஜனகர் உங்களைப் போன்றே சதானந்தரைக் கேட்டார். அதற்கு சதானந்தர் ஜனகருக்குக் கூறியதை நான் உங்களுக்கு கூறுகிறேன்.

“முனிவர்களே! யுகங்களில் இரண்டாவது யுகம் “த்ரேதாயுகம்” அந்த யுகத்தில் அனைவராலும் அறியப் பட்டவராக விளங்கியவர் ஜனக மஹாராஜா. அவர் மிதிலை நாட்டிற்கு அரசனும் ஆவார். ஒரு நாள் ஜனக மஹாராஜா, தனக்குள் தானே “எனக்குத் திருமண வயதில் ஒரு பெண் இருக்கிறாள். அதே போல் என் தம்பி குஷத் வஜாவிற்கும் மூன்று பெண்கள் இருக்கிறார்கள். இந்த

நால் வருக்கும் தகுந்த துணையைத் தேடித் தர வேண்டியது தந்தையாகவும், வீட்டிற்குப் பெரிய வன் என்ற முறையிலும் எனது தர்மம் ஆகும். இந்த மாப்பிள்ளை நால்வரும் ஒரே இராஜ வம் சத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என நினைத்துக் கொண்டு இருக்கையில் அவரிடம் சதானந்தர் வந்தார்.

ஜனக மஹாராஜா சதானந்தருக்குத் தகுந்த மரியாதை செய்தார். ஜனக மஹாராஜாவிற்கு ஏதோ ஒரு மனக்குறை இருப்பதை உணர்ந்து கொண்ட சதானந்தர் "மன்னா! சீதைக்கும் மாண்ட ஷிகா, ஊர்மிளா, சுருதகீர்த்திக்கும் திருமணம் செய்ய வேண்டுமல்லவா! அவர்களுக்குத் தகுந்த மணவாளர்களைத் தேடும் முயற்சியை மேற்கொண்டுள்ளீர்களா?" என வினவினார்.

"சம்மீஸ்வரா! உண்மையே. நான் ஒரு யாகம் செய்வதற்கு ஆயத்தப் பணிகள் செய்யும் முகமாக பூமியை உழுதுக் கொண்டிருக்கும் போது மிகவும் அதிசயிக்கத்தக்க வகையில் கலப்பை சாலில் சீதையைக் கண்டேன். அந்தக் குழந்தை சாதாரண குழந்தையாக எனக்குத் தோன்றவில்லை. பூதேவி யாகவே எண்ணத் தோன்றியது. ஆசிர்வாதம் பெற்ற பெண்ணாகிய இவளுக்குத் தகுதியான மணவாளன் மக்களுள் ஒருவனாக இருக்க முடியுமா? எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ? எனக்கு சீதையின் வடிவழகைப் பார்க்கும்போதெல்லாம் தாய் ரமாதேவி வம்சத்தைச் சேர்ந்தவளாகத் தோன்றுகிறது. இப்படிப் பட்ட பெண்ணிற்கு ஹரி அம்சம் உடைய மணாளனே சரியானவனாவான். அப்படிப்பட்ட மணாளன் இருப்பானா?

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

## என்னால் பிரயோசனம் ஏதுண்டு?



*பொன்னால் பிரயோசனம், பொன்படைத்தார்க்கு உண்டு;*
*பொன்படைத்தோன்*
*தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு அங்கே ஏதுண்டு?*
*அத்தன்மையைப் போல்*
*உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு!*
*உனைப்பணியும்*
*என்னால் பிரயோசனம் ஏதுண்டு? காளத்தி ஈசுவரனே!*

– பட்டினத்தார்

பொருள் : திருக்காளத்திச் சிவபெருமானே! பொன்னால் ஆக வேண்டிய பயன் பொன்னை உடையவர்களுக்குண்டு; பொன்னைப் பெற்றவனால் பொன்னுக்கு ஆக வேண்டிய பயன் என்ன இருக்கிறது? அதுபோல, இறைவா! உன்னால் விளைய வேண்டிய பயன் அடியேனுக்குப் பல உண்டு. உன்னைத் தொழும் அடியேனால் இறைவா, உனக்கு ஆக வேண்டிய பயன் ஒன்றும் இல்லையே.




**வாழ்வியலுக்கான கருத்து** : சிவம், இன்பமும் மங்கலப் பொருளும் ஆகையால் சிவத்தை அடையும் உயிர்களுக்கு அவ்வின்பம் நுகர்தலாகிய பயனுண்டு. உயிர்களால் சிவத் திற்கு என்ன பயன் உள்ளது? இதனை, மாணிக்கவாசகரின் "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா யார் கொலோ சதுரா?" என்ற வரிகளால் உணரலாம்?

**-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை**

# வித்தியாசமான திருக்கோலங்களில் பெருமாள்



பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனான அந்த மகாவிஷ்ணு இப்பூவுலகில் பல்வேறு திருத்தலங்களில் பல்வேறு வடிவங்களில் காட்சி தந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றார். அப்படி வித்தியாசமான திருக்கோலங்களில் எழுந்தருளி சேவை சாதிக்கும் அபூர்வ பெருமாள் கோயில்களை இக்கட்டுரையில் தரிசிப்போம் வாருங்கள்.

- 108 திவ்ய தேசங்களில் வித்தியாசமான ஆதி வராகப் பெருமாள் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கள்வனூரில் காமாட்சி அம்மன் சன்னதி திருச்சுற்றில் ஒரு மூலையில் சிறிய வடிவில் திருக்காட்சி தருகிறார்.
- திருச்சி முசிறி சாலையில் உள்ள வேத நாராயணன் கோயிலில் பெருமாள் அனைத்து வேதங்களையும் தலையணையாக வைத்து படுத்திருப்பதால் வேத நாராயணப் பெருமாளாகக் காட்சி தருகிறார்.
- ஆசியாவிலேயே மிகப் பெரிய பள்ளி கொண்ட பெருமாளாக திருமயத்தில் காட்சி தருகிறார்.
- கர்நாடகத்தில் உள்ள ஸ்ரீரங்கபட்டினத்தில் ரங்கநாதப் பெருமாள் ஏழு தலைகள் கொண்ட ஆதிசேஷனுடன் காட்சி தருகிறார்.
- ஸ்ரீவைகுண்டம் நத்தத்தில் ஆதிசேஷன் குடைபிடிக்க பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரத்தில் உள்ள விளக்கொளிப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஜோதி வடிவில் இருப்பதாக ஐதீகம்.
- கருங்குளத்தில் மூன்றடி சந்தனக் கட்டை வடிவில் வைத்து பெருமாளாக அபிஷேகம் செய்து பூஜித்து வருகிறார்கள். இரு பக்கமும் சங்கு, சக்கரம் உள்ளது.
- மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் ஒரு கரத்தை தலையில் வைத்தும், தரையில் சாய்வாக கால் நீட்டி சயனப் பெருமாளாகக் காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள அத்திவரதர் அனந்த சரஸ் என்ற திருக்குளத்தில் நீருக்கு அடியில் எழுந்தருளியுள்ளார். 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே வந்து காட்சி தருகிறார்.





- திருப்பாற்கடல் ஊரில் உள்ள கோயிலில் ஆவுடையார் மீது சிவலிங்கத்திற்குப் பதிலாக பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.
- திருப்பதி ஏழுமலைக்கு மேல் நாராயண கிரி என்ற தலத்தில் ஏழுமலையானின் திருப்பாதச் சுவடுகள் உள்ளது. இதனை ஸ்ரீவாரி பாதம் என்பர். பெருமாள் திருமலையில் முதலில் தடம் வைத்த இடம் இது எனச் சொல்லப்படுகிறது.
- சிங்கப் பெருமாள் கோயிலில் நரசிம்மப் பெருமாள் மூன்று திருக்கண்களுடன் காட்சி தருகிறார்.
- திருக்கண்ணபுரத்தில் கண்ணபுர பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி,ஆண்டாள் என நான்கு தேவியருடன் பத்மாசனத்தில் காட்சி தருகிறார்.
- திருச்சி ஸ்ரீரங்கநாதர் கோயில் பூலோக வைகுண்டம் என்ற பெருமையும், 108 வைணவத் திருத்தலங்களில் முதல் இடத்தைப் பெற்றது. கோயில் கருவறை மேல் தங்கத்தகடுகளால் வேயப்பபட்ட விமானம் உள்ளது. விமானத்தின் மேல் ரிக், யஜுர்,சாம, அதர்வண வேதங்களைக் குறிக்கும் வகையில் நான்கு தங்கக் கலசங்கள் உள்ளன. இங்கு பெருமாள் சேஷ சயனத்தில் (புஜங்க சயனம்) ஆதிசேஷன் மீது சயனித்து காட்சி தருகிறார்.
- சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் உள்ள பெருமாள் 9 அடி உயரம் கொண்டவர். இங்கு இவர் முகத்தில் மீசையுடன் காட்சி தருகிறார். பெருமாள் தன் மனைவி, சகோதரர் என குடும்ப சகிதமாக உள்ளார். இவர் கையில் ஆயுதம் இன்றி காட்சி தருகிறார்.
- திருவள்ளூர் வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் பெருமாள் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கியும், மூலவரின் வலது புறம் சாலி கோத்திர மகரிஷியும், இடது புறம் பிரம்மாவுக்கு உபதேசம் செய்யும் ஞான முத்திரையுடன் காட்சி தருகிறார்.

வாய்ப்பு கிடைக்கும் ஆன்மீக அன்பர்கள் நேரம் கிடைக்கும் பொழுது மேலே உள்ள பெருமாள் கோயில்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வாழ்வில் வளமும் நலமும் பெறலாம்.

**– திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை.**
**94441 60161**









**தெலுங்கு மூலம்:**
**டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.**
**தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.**

சூரியனின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு இருக்கிறது. இக்கோடை காலத்தில் மக்கள் பல நோய்களுக்கு ஆளாகின்றனர். இவ்விஷயம் யாவரும் அறிந்ததே.

வெப்பம் அதிகரிப்பதால் உடலில் நீரின் அளவு குறைந்து, அதிகமான தாகம், வாய் வறட்சி, வயிற்றுப் போக்கு, சிறுநீரகக் கோளாறுகளும், உடல் சூடு, அதிக வியர்வை போன்ற இன்னல்களும் ஏற்படுகின்றன. இக்கோடைக் காலத்தில் உடல் ஆரோக்கியமாக இருக்க என்ன செய்ய வேண்டும். எவ்வித உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கடை பிடிப்போம்.

கோடைக்காலத்தில் நாம் உட்கொள்ள வேண்டிய உணவுகள் மற்றும் தவிர்க்க வேண்டிய உணவுகள்:

தண்ணீர் அதிகமாக அருந்துதல் வேண்டும்.

மிக விரைவில் செரிமானம் ஆகக்கூடிய உணவுகளையே உட்கொள்ளுதல் வேண்டும்.

எண்ணெய், உப்பு, காரம் மற்றும் மசாலாப் பொருட்களை அதிக அளவில் உபயோகித்தல் கூடாது.

ஊறுகாய் வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

காபி, டீ போன்றவற்றை குறைந்த அளவே குடித்தல் வேண்டும்.

மோர், தயிர், பால், இளநீர், எலுமிச்சை ரசம், பழ ரசங்கள் ஆகியவற்றை அதிக அளவில் அருந்துதல் வேண்டும்.

பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், வெள்ளரிக்காய், தர்பூசணிக்காய் ஆகியவற்றை அதிகமாக எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

நுங்கும் உடலுக்கு மிக நன்மை பயக்கும்.

நாம் செய்ய வேண்டிய செயல்கள்:

பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். வெண்மையான ஆடைகள் அணிந்தால் மிகவும் நல்லது. உடற்பயிற்சிகள் காலை 9 மணிக்குள்ளாகவும், மாலை 5 மணிக்குப் பின்னரும் செய்தல் வேண்டும். வெளியே செல்லும்போது கண்ணாடி, தொப்பி போன்றவற்றை அணிதல் வேண்டும். குடையைக் கொண்டு செல்லுதல் வேண்டும். பிரயாணம் செய்யும் போது அதிக அளவு நீரை உட்கொள்ளுதல் வேண்டும்.

நாம் கடைபிடிக்க வேண்டிய சில முக்கிய உணவு வகைகள்:

நாள்தோறும் ஓரிரண்டு முறை நீர் மோரில் சீரகப்பொடி, சுக்குப்பொடி, மிளகுப் பொடி, உப்பு (சைந்தவ லவணப் பொடி) சேர்த்து குடித்தல் வேண்டும்.

ஒரு டம்பளர் நீரில் அரை டீஸ்பூன் கற்கண்டு பொடி, 2 லவங்கம், 3 மிளகு ஆகியவற்றின் பொடி, ஒரு சிட்டிகை பச்சைக் கற்பூரம் ஆகியவற்றை சேர்த்து குடித்தால் உடம்பிற்கு நல்லது.

நாள்தோறும் ஒருமுறை 50 மி.லி. பாலில் ஒரு டீஸ்பூன் ரோஸ் வாட்டர் கலந்து குடித்தல் வேண்டும்.

ஒரு டம்ளர் நீரில் இரண்டு டீஸ்பூன் வெல்லத்தைப் போட்டு, கால் டீஸ்பூன் வெட்டிவேர், ஒரு மூடியளவு எலுமிச்சை ரசம் ஆகியவற்றை சேர்த்து நன்கு கலந்து குடித்து வந்தால் கோடை வெயில் தாக்கத்திலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.



# ஸ்ரீஆஞ்சநேயர் வழிபாட்டு முறை

அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு ஸ்ரீஅனுமன் வழிபாட்டு முறை ஸப்தகிரி வாசகர்களுக்காக...

அதி காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு, அன்றாட வேலைகளை முடித்து, மிகவும் தூய்மையான மனத்துடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும் இந்த பூஜையைச் செய்திட வேண்டும். துளசி, மலர்கள், பழங்கள் எனப் பூஜைக்குத் தேவையான பொருட்களுடன் - ஸ்ரீஆஞ்சநேயர் படம் அல்லது விக்ரகம் வைத்து நம் குல வழக்கம் போல் வழிபடுதல் வேண்டும்.

ஸ்ரீகேசவாதி நாமங்களை ஆசமனீயம் செய்த பின்னர் பிராணாயாமம் செய்து சங்கல்பம் செய்தல் வேண்டும். கண்டநாதம் முடிந்தவுடன் ஆசமனீயம் செய்து ,

சுபதிதௌ....... கோத்ரஸ்ய.... நாம தேயஸ்ய... தர்ம பத்னீ சமேதஸ்ய சஹகுடும்பஸ்ய சபுத்ரகஸ்ய சபௌத்ரகஸ்ய சப்ராத்ருகஸ்ய சபாந்தவஸ்ய சபரிவாரஸ்ய க்ஷேம, ஸ்தைர்ய, தைர்ய, விஜய, அபய, ஆயுராரோக்ய ஐச்வர்யாபிவ்ருத்தர்த்யம், தர்மார்த, காமமோக்ஷ சதுர்விதபல புருஷார்த சித்த்யர்தம், ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி தேவதா முத்திச்ய ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி தேவதா ப்ரீத்யர்தே க்ஷோடசோபசார பூஜாம் கரிஷ்யே...

எனச் சங்கல்பித்து கலச ஆராதனை செய்து, கலசம் மீது கரங்களை வைத்து,

ததங்க கலசாராதனம் கரிஷ்யே கலசம் கந்த
புஷ்பாக்ஷதை ரப்யர்ச்ய:
கலசஸ்யமுகே விஷ்ணு: கண்டே ருத்ர: சமாச்ரித:
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா:
ஸ்ம்ருதா:
குக்ஷௌது சாகரா ஸ்ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா
ருக்வேதோऽத யஜுர்வேதஸ்ஸாமவேதோ ஹ்யதர்வண:।
அங்கைச்ச ஸஹிதா ஸ்ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:।
கங்கேச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதீ ।
நர்மதே சிந்து காவேர்யௌ ஜலேऽஸ்மிந் ஸந்நிதிம் குரு
காவேரீ துங்கபத்ரா சா க்ருஷ்ணவேணீ ச கௌதமீ
பாகீரத்தி விக்யாதா: பஞ்சகங்கா: ப்ரகீர்திதா:
ஆயாந்து தேவ பூஜார்தம் துரிதக்ஷயகாரகா: ॥

கலசத்தில் உள்ள நீரினை புஷ்பத்தாலோ, துளசியாலோ எடுத்துக்கொண்டு தெய்வப் பிரதிமை மீதும், தன்மீதும், பூஜை திரவியங்கள் மீதும் தெளித்தல் வேண்டும்.

"அதௌ சங்கல்பித பூஜா நிர்விக்னேன பரிசமாப்த்யர்தம் ஸ்ரீமஹாகணபதி பூஜாம் கரிஷ்யே.. (கணபதியைப் பூஜித்த பிறகு) பூர்வ சங்கல்பித ஸ்ரீஆஞ்சநேய பூஜாம் கரிஷ்யே" எனப் பூஜையை ஆரம்பித்தல் வேண்டும். சங்கல்ப:...... பூர்வோக்த...... சுபதிதௌ ஸ்ரீஆஞ்சநேய தேவதா ப்ரீத்யர்தம் ஷோடசோபசார பூஜாம் கரிஷ்யே.

## தியானம்

மர்கடேச மஹோத்ஸாஹ சர்வசோகவினாசன
சத்ரூன் சம்ஹார மாம் ரக்ஷ ச்ரியம் தாபயமே ப்ரபோ ।
ஸ்படிகாபம் ஸ்வர்ணகாந்தீம் த்விபுஜம் ச க்ருதாஞ்சலிம்
குண்டலத்வய சம்சோபி முகாம்போஜம் முஹுர்முஹு: ॥
ஸ்ரீஹனுமதே நம: த்யாயாமி.

## ஆவாஹணம்

ராமசந்த்ர பதாம்போஜ யுகளஸ்திரமானஸம்
ஆவாஹயாமி வரதம் ஹனுமந்த மபீஷ்டதம்
ஸ்ரீஹனுமதே நம: ஆவாஹயாமி.

### சிம்ஹாசனம்

நவரத்ன நிபத்தார்ச்ரம் சதுரச்ரம் சுசோபனம்
ஸௌவர்ணமாஸனம் துப்யம் தாஸ்யாமி கபிநாயக
ஸ்ரீஹனுமதே நம: சுவர்ணரத்ன சிம்ஹாசனம் சமர்பயாமி

### பாத்யம்

சுவர்ண கலசாநீதம் கங்காதி ஸலிலைர்யுதம்
பாதயோ: பாத்யமனகம் ப்ரதிக்ருஹ்ய ப்ரஸீத மே
ஸ்ரீஹனுமதே நம: பாத்யம் சமர்பயாமி

### அர்க்யம்

குசுமாக்ஷத ஸம்மிச்ரம் ப்ரஸன்னாம்பு பரிப்லுதம்
அனர்ப்ய மர்த்ய மதுனா க்ருஹ்யதாம் கபிபுங்கவ
ஸ்ரீஹனுமதே நம: முகே ஆசமனீயம் சமர்பயாமி

### மதுபர்கம்

மத்வாஜ்யக்ஷீர மிஸிதம் சர்கரா ததிஸம்யுதம்
அர்பயே மதுபர்கம் தேஸ்வீகுருத்வம் தயாமய
ஸ்ரீஹனுமதே நம: மதுபர்கம் சமர்பயாமி

### பஞ்சாம்ருதஸ்நானம்

மத்வாஜ்ய க்ஷீரததிபி: ஸகுடைர்மந்த்ர பாலிதை:
பஞ்சாம்ருதை: ப்ருதக்ஜாதை ஸ்ஸிஞ்சாமித்வாம் கபீச்வர
ஸ்ரீஹனுமதே நம: பஞ்சாம்ருத ஸ்நானம் சமர்பயாமி
ஸ்ரீஹனுமதே நம: சுத்தோதகஸ்நானம் சமர்பயாமி
ஸ்நானானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி.

### வஸ்த்ரம்

க்ரதிதாம் நவரத்னைச்ச மேகலாம் த்ரிகுணீக்ருதாம்
அர்பயாமி கபீசத்வம் க்ருஹாணமஹதாம் வர
ஸ்ரீஹனுமதே நம: வஸ்த்ரயுக்மம் சமர்பயாமி
வஸ்த்ரதாரணானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி.

எனச் சொல்லி ஆடை ஒன்றை கட்டி இரண்டு தோள்களில் இருந்து தொங்கும்படி மேல்சாத்தினை அணிவித்தல் வேண்டும்.

### யஜ்ஞோபவீதம்

ச்ரௌத ஸ்மார்தாதி க்ருத்யானாம் ஸாங்கோபாங்க பலப்ரதம்
யக்ஞோபவீத மனகம் தாரயா ऽ நிலநந்தன
ஸ்ரீஹனுமதே நம: யக்ஞோபவீதம் சமர்பயாமி
அநந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி

### கந்தம், சிந்தூரம்

திவ்யசிந்தூர கற்பூர ம்ருகநாபி ஸமன்விதம்
ஸகுங்குமம் பீதகந்தம் லலாடே தாரயானக
ஸ்ரீஹனுமதே நம: கந்தசிந்தூராணி சமர்பயாமி

எனக்கூறி வாசனைமிக்க சந்தனம் சிந்தூரத்தை விக்ரக முகத்திற்கும், பாதத்திற்கும் வைத்தல் வேண்டும்.

### புஷ்பாக்ஷதை

நீலோத்பலை: கோகநதை: கல்ஹார கமலைரபி
குமுதை: புண்டரீகைஸ்த்வாம் பூஜயாமி கபீச்வர
ஸ்ரீஹனுமதே நம: பரிமள புஷ்பாக்ஷதான் சமர்பயாமி

எனக்கூறி விக்ரகத்தை பூக்களால் அலங்கரித்தல் வேண்டும்.

### அங்க பூஜை

| | |
|---|---|
| ஸ்ரீஹனுமதே நம: | பாதௌ பூஜயாமி |
| ஸ்ரீசுக்ரீவ சகாய நம: | குல்பௌ பூஜயாமி |
| ஸ்ரீஅங்கதமித்ராய நம: | ஜங்கே பூஜயாமி |
| ஸ்ரீராமதாசாய நம: | ஊரு பூஜயாமி |
| ஸ்ரீஅக்ஷக்னாய நம: | கடிம் பூஜயாமி |
| ஸ்ரீலங்காதஹனாய நம: | வாலம் பூஜயாமி |
| ஸ்ரீராமமணிதாய நம: | நாபிம் பூஜயாமி |
| ஸ்ரீசாகரோல்லங்கநாய நம: | மத்யம் பூஜயாமி |
| ஸ்ரீலங்காமர்தநாய நம: | கேசவலீம் பூஜயாமி |
| ஸ்ரீசஞ்சீவாஹர்த்நே நம: | ஸ்தனௌ பூஜயாமி |
| ஸ்ரீஸௌமித்ரி ப்ராணதாய நம: | வக்ஷ: பூஜயாமி |
| ஸ்ரீகுண்டித தசகண்டாய நம: | கண்டம் பூஜயாமி |
| ஸ்ரீராமாபிஷேககாரிணே நம: | ஹஸ்தௌ பூஜயாமி |
| ஸ்ரீமந்த்ரசித ராமாயணாய நம: | வக்த்ரம் பூஜயாமி |
| ஸ்ரீபிரசன்னவதநாய நம: | வதனம் பூஜயாமி |
| ஸ்ரீபிங்கநேத்ராய நம: | நேத்ரே பூஜயாமி |
| ஸ்ரீச்ருதிபாரகாய நம: | கர்ணௌ பூஜயாமி |
| ஸ்ரீஊர்த்தவபுண்ட்ரதாரிணே நம: | கபோலே பூஜயாமி |
| ஸ்ரீமணிகண்டமாலினே நம: | சிர: பூஜயாமி |
| ஸ்ரீசர்வாபீஷ்டப்ரதாய நம: | சர்வாண்யங்காநி பூஜயாமி |

# ஸ்ரீமத்ஆஞ்சநேய அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீஆஞ்சநேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் ஹநுமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் தத்வஜ்ஞாநப்ரதாய நம:
ஓம் ஸீதாதேவீ முத்ரா ப்ரதாயகாய நம:
ஓம் அசோகவநிகாச்சேத்ரே நம:
ஓம் ஸர்வமாயாவி பஞ்ஜநாய நம:
ஓம் ஸர்வபந்தவிமோக்த்ரே நம:
ஓம் ரக்ஷவித்வம்ஸகாரகாய நம: (10)
ஓம் பரவித்யாபரீஹாராய நம:
ஓம் பரஸௌர்யவிநாஸகாய நம:
ஓம் பரயந்த்ர நிராகர்த்ரே நம:
ஓம் பரமந்த்ரப்ரபேதகாய நம:
ஓம் ஸர்வக்ரஹவிநாசாய நம:
ஓம் பீமஸேநஸஹாயக்ருதே நம:
ஓம் ஸர்வது:கஹராய நம:
ஓம் ஸர்வலோகசாரிணே நம:
ஓம் மநோஜவாய நம:
ஓம் பாரிஜாதத்ருமூலஸ்தாய நம: (20)
ஓம் ஸர்வமந்த்ரஸ்வரூபாய நம:
ஓம் ஸர்வ தந்த்ரஸ்வரூபாய நம:
ஓம் கபீச்வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் சர்வரோஹராய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பலஸித்திகராய நம:
ஓம் ஸர்வவித்யாஸம்ப த்ப்ரதாய நம:
ஓம் கபிஸேநாநாயகாய நம:
ஓம் பவிஷ்யச்சதுராநநாய நம: (30)
ஓம் குமாரப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ரத்னகுண்டல தீப்திமதே நம:
ஓம் ஸஞ்சலத் வாலஸந்நத்த லம்பமாந
சிகோஜ்ஜ்வாலாய நம:
ஓம் கந்தர்வவித்யா தத்வஜ்ஞாய நம:
ஓம் மஹாபலபராக்ரமாய நம:
ஓம் காராக்ருஹவி மோக்த்ரே நம:

ஓம் ச்ருங்கலா பந்தமோசகாய நம:
ஓம் ஸாகரோத்தாரகாய நம:
ஓம் ப்ராஜ்ஞாய நம:
ஓம் ராமதூதாய நம: (40)
ஓம் ப்ரதாபவதே நம:
ஓம் வாநராய நம:
ஓம் கேஸரிஸுதாய நம:
ஓம் ஸீதாஸோக நிவாரகாய நம:
ஓம் அஞ்ஜநாகர்ப ஸம்பூதாய நம:
ஓம் பாலார்கஸத்ருஸாந நாய நம:
ஓம் விபீஷணப்ரியகராய நம:
ஓம் தஸக்ரீவகுலாந்தகாய நம:
ஓம் லக்ஷ்மணப்ராணதாத்ரே நம:
ஓம் வஜ்ரகாயாய நம: (50)
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் சிரஞ்ஜீவிநே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் தைர்யகார்ய விகாதகாய நம:
ஓம் அக்ஷஹந்த்ரே நம:
ஓம் காஞ்சநாபாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் மஹாதபஸே நம:
ஓம் லங்கிணீ பஞ்ஜநாய நம:
ஓம் ஸ்ரீமதே நம: (60)
ஓம் ஸிம்ஹி காப்ராண பஞ்ஜகாய நம:
ஓம் கந்தமாதநசைலஸ்தாய நம:
ஓம் லங்காபுரவிதாஹகாய நம:
ஓம் ஸுக்ரீவசிவாய நம:
ஓம் தீராய நம:
ஓம் சூராய நம:
ஓம் தைத்யகுலாந்தகாய நம:
ஓம் ஸுரார்சிதாய நம:
ஓம் மஹாதேஜஸே நம:
ஓம் ராமசூடாமணிப்ரதா நம: (70)
ஓம் காமரூபாய நம:
ஓம் பிங்களாக்ஷய நம:
ஓம் வார்திமைகபூஜிதாய நம:

ஓம் கபளீக்ருதமார்தாண்ட மண்டலாய நம:
ஓம் விஜிதேந்தரியாய நம:
ஓம் ராமஸுக்ரீவஸந்தாத்ரே நம:
ஓம் மஹாராவணமர்தநாய நம:
ஓம் ஸ்படிகாபாய நம:
ஓம் வாகதீஸாய நம:
ஓம் நவவ்யாக்ருதி பண்டிதாய நம: (80)
ஓம் சதுர்பாஹவே நம:
ஓம் தீநபந்தவே நம:
ஓம் மஹாத்மநே நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் ஸஞ்ஜீவநநகா ஹர்த்ரே நம:
ஓம் ஸுசயே நம:
ஓம் வாக்மிநே நம:
ஓம் த்ருடவ்ரதாய நம:
ஓம் காலநேமிப்ரமத நாய நம:
ஓம் ஹரிமர்கடமர்கடாய நம: (90)
ஓம் தாந்தாய நம:
ஓம் சாந்தாய நம:
ஓம் ப்ரஸந்நாத்மநே நம:
ஓம் தசகண்ட மதா பஹ்ருதே நம:
ஓம் யோகிநே நம:
ஓம் ராமகதாலோலாய நம:
ஓம் ஸீதாந்வேஷண பண்டிதாய நம:
ஓம் வஜ்ரதன்ஷ்ட்ராய நம:
ஓம் வஜ்ரநாய நம:
ஓம் ருத்ரவீர்யஸமுத்பவாய நம: (100)
ஓம் இந்திரஜித் ப்ரஹிதா மோகப்ரஹ்மா
ஸ்த்ரவினிவாரகாய நம:
ஓம் பார்தத்வஜாக்ரஸம்வாசினே நம:
ஓம் சரபஞ்சரபேதகாய நம:
ஓம் தீர்கபாஹவே நம:
ஓம் லோகபூஜ்யாய நம:
ஓம் ஜாம்பவத் ப்ரீதி வர்த்தநாய நம:
ஓம் ஸீதாஸமேத ஸ்ரீராம பாதஸேவா
துரந்தராய நம:

ஸ்ரீமதாஞ்சநேய ஸ்வாமினே நம:
அஷ்டோத்தர சதநாமபூஜாம் சமர்ப்பயாமி

### தூபம்

திவ்யம் சகுக்குலும் ரம்யம் தசாங்கேன ஸமன்விதம்
க்ருஹாண மாருதே தூபம் சுப்ரியம் க்ராணதர்பணம்
ஶ்ரீஹனுமதே நம: திவ்ய பரிமள தூபமாக்ராபயாமி
அனைவரும் காணும்படி தூபம் காட்டுதல் வேண்டும்.

### தீபம்

க்ருதவர்தி ஸமுஜ்ஜ்வாலா சதசூர்ய சமப்ரபம்
அதுலம் தவ தாஸ்யாமி வ்ரதபூர்யை சுதீபகம்
ஶ்ரீஹனுமதே நம: தீபம் தர்ஸயாமி
தீபம் காட்டி பின்னர், தூப தீபானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி எனக் கூறி உத்தரணீ நீரினை இறைவனின் திருமுகத்திற்குக் காட்டி அர்க்ய பாத்திரத்தில் இட வேண்டும். கவனிக்க : உபசாரத்தால் அளிக்கப்படும் இந்த தீபத்தை கண்களுக்கு ஒற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

### நைவேத்யம்

மணீபாத்ர ஸஹஸ்ராத்யம் திவ்யான்னம் க்ருதபாயஸம்
ஆபூப லட்டுகோபேதம் மதுராம்ர பலைர்யுதம்
ஹிங்கூஜீரக ஸம்யுக்தம் ஷட்ரஷோபேத முத்தமம்
நைவேத்ய மர்பயாம்யத்ய க்ருஹாணேதம் கபீச்வர
யதாவிதி நிவேதனம் குர்யாத்
மத்யே மத்யே பானீயம் சமர்பயாமி.
உத்தராபோசனம் சமர்பயாமி; ஹஸ்த ப்ரக்ஷாளனம்;
சமர்பயாமி; முக ப்ரக்ஷாளனம் சமர்பயாமி; பாதப்ரக்ஷாளனம்
சமர்பயாமி; கண்டூஷம் சமர்பயாமி;சுத்தாசமனீயம் சமர்பயாமி
ஐந்து முறை உத்தரிணியில் நீரினை அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும். தாம்பூலத்தில் 3 பாக்குகள், 2 வெற்றிலை, 2 பாக்கு, 3வெற்றிலை வைத்தல் வேண்டும்.

### தாம்பூலம்

நாகவல்லீ தளோபேதம் க்ரமுகைர்மதுரைர்யுதம்
தாம்பூல மர்பயாம்யத்ய கற்பூராதி சுவாஸிதம்
ஶ்ரீஹனுமதே நம: பிரதக்ஷிண தாம்பூலம் சமர்பயாமி
தாம்பூல சர்வணானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி
தாம்பூல சர்வணானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி.
பின் மணி அடித்தல் வேண்டும்.

### கற்பூர நீராஜனம்

ஆரார்திகம் தமோஹாரிசதசூர்ய சமப்ரபம்
அர்பயாமி தவப்ரீத்யை அந்தகார நிகாதனம்
ஶ்ரீஹனுமதே நம: கற்பூரநீராஜனம் சமர்பயாமி
மூன்று முறை பாதாதி கேசமாக இறைவனைத் தரிசித்து, வலது புறமாக கற்பூர ஆரத்தி காண்பித்தல் வேண்டும்.
நீராஜனானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி.

### மந்த்ரபுஷ்பம்

ஆஞ்சநேயாய வித்மஹே வாயுபுத்ராய
தீமஹி தன்னோ ஹனுமத்ப்ரசோதயாத்
ஶ்ரீஹனுமதே நம: சுவர்ண திவ்ய மந்த்ரபுஷ்பம் சமர்பயாமி
நம் இதயத்தையே புஷ்பமாகச் சமர்ப்பித்ததாகவே எண்ணி, மலர்களை திருப்பாதங்களில் சமர்ப்பித்தல் வேண்டும். அனைவரும் அளித்த மலர்கள் மீது கலச நீரினைத் தெளித்து ஸ்வாமியின் திருப்பாதங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.

### பிரதக்ஷிண நமஸ்காரம்

பிரதக்ஷிண நமஸ்காரான் ஸாஷ்டாங்கான் பஞ்சஸங்க்யயா
தாஸ்யாமி கபிநாதாய க்ருஹாண சுப்ரஸீத மே
ஶ்ரீஹனுமதே நம: ஆத்மபிரதக்ஷிண நமஸ்காரன் சமர்பயாமி.
இடமிருந்து வலமாக நமஸ்காரம் செய்யும் முறையில் ஐந்து முறை பிரதக்ஷிணம்.
சத்ரம் தாரயாமி, சாமரைர்வீஜயாமி, நருத்யம் தர்சயாமி, கீதம் ச்ரவயாமி, தர்பணம் தர்சயாமி, உஷ்ட்ராநாவாஹயாமி, வாத்யம் கோஷயாமி, ஸமஸ்த ராஹோபசார, பக்த்யுபசார, சக்த்யுபசார பூஜாம் சமர்பயாமி எனக் கூறி புஷ்பம், அக்ஷதை ஸ்வாமியின் திருப்பாதங்களில் இட்டு வணங்குதல் வேண்டும்.
அனயா... பூஜாய ஶ்ரீஹனுமத்தேவதா சுப்ரீத: சுப்ரசன்னோ வரதோ பவது. ஸர்வோஜன: ஸ்ஸுகினோ பவந்து.

### புஷ்பாஞ்சலி

வைசாகே மாஸி க்ருஷ்ணாயாம் தசம்யாம் மந்தவாஸரே
பூர்வபாத்ர ப்ரசூதாய மங்களம் ஶ்ரீஹனுமதே

கருணாரஸபூர்ணாய பலபூப ப்ரியாயச
மாணிக்யஹாரபூஷாய மங்களம் ஶ்ரீஹனுமதே

சுவர்சலா களத்ராய சதர்புஜ தராய ச
உஷ்ட்ராரூடாய வீராய மங்களம் ஶ்ரீஹனுமதே

திவ்யமங்கள தேஹாய பீதாம்பர தராய ச
தப்தகாஞ்சனவர்ணாய மங்களம் ஶ்ரீஹனுமதே

பக்தரக்ஷண சீலாய ஜானகீ சோகஹாரிணே
ஜலத்பாவகனேத்ராய மங்களம் ஶ்ரீஹனுமதே

பம்பாதீர விஹாராய ஸௌமித்ரி ப்ராணதாயினே
நருஷ்டே காரணபூதாய மங்களம் ஶ்ரீஹனுமதே

ரம்பாவன விஹாராய கந்தமாதன வாஸினே
சர்வலோகைகநாதாய மங்களம் ஶ்ரீஹனுமதே

பஞ்சானநாய பீமாய காலநேமி ஹராய ச
கௌண்டின்ய கோத்ர ஜாதாய மங்களம் ஶ்ரீஹனுமதே

ஶ்ரீஹனுமதே நம: புஷ்பாஞ்சலிம் சமர்பயாமி.

# ஆதிசங்கரர்



திருமறை என்று போற்றப்படும் வேதம் நான்கு வகையாகும். அவை ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்பவையாகும். இந்த நான்கு வேதங்களும் நான்கு மகா வாக்கியங் களைத் தெரிவிக்கின்றன.

“ப்ரக்ஞானம் பிரம்ம” என்பது ருக்வேதம். இதன் கருத்து “பிரம்மம் பேருணர்வுப் பொருள்” என்பதாகும். “அஹம் பிரம்மாஸ்மி” என்பது யஜுர் வேதம். “நான் பிரம்ம மயமாய் இருக்கின்றேன்” என்பது இதன் கருத்து. “தத்வமஸி” என்பது சாமவேதம். “அது நீ ஆகிறாய்” என்பது இதன் கருத்து. “அயமாத்ம பிரம்ம” என்பது அதர்வண வேதம். “இந்த ஆன்மா பிரம்மம்” என்பது இதன் கருத்தாகும்.

வேத காலத்திற்குப் பிறகு இந்தக் கருத்து களை மறுத்து கூறும் வேறு மதங்கள் தோன் றின. வேதங்களை ஏற்காதவர்கள் ஒருபுறம். இறைவனை நிராகரித்தோர் ஒரு புறம். உலகாயதம், புத்தம், சமணம், சாங்கியம், மீமாம்சம் ஆகிய மதங்கள் இறைவனை நிராகரித்து கருத்துக்களைப் போதித்தன.

இவ்வாறான காலத்தில் பொது ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 509–இல் வைகாசி மாதம் வளர்பிறை திருவாதிரை நாளில் ஒன்றுபட்ட தமிழகப் பரப்பில் காலடி (கேரளா) எனும் திருத்தலத்தில் சிவகுரு ஆர்யாம்பாள் எனும் தம்பதிக்குத் திருமகனாய் ஆதிசங்கரர் தோன்றினார் என்று சங்கர மடங்கள் தெரிவிக்கின்றன. வேதநெறி தழைத்தோங்கிட சிவபெருமானே ஆதிசங்கரராய் திருவவதாரம் செய்தார். இவர் போதித்த மார்க்கம் அத்வைதமாகும். அ–இல்லை; த்வைதம் – இரண்டு; அத்வைதம் – இரண்டற்ற ஒன்று என்பது இதன் கருத்து. இறைவனாகிய பிரம்மம் ஒன்றேயாகும். காணும் அனைத்து உயிர்களும் பிரம்மமேயாகும் என்பது அத்வைதத்தின் சாராம்சமாகும்.

சிவகுரு ஆர்யாம்பாள் தம்பதியினர் தங்களது குழந்தைக்குச் சங்கரன் என்று திருப்பெயரிட்டனர். சங்கரன் எனில் ஆனந்தத்தைத் தருபவர் என்பது கருத்து. அந்தக் குழந்தை சிறு வயது முதற்கொண்டே ஞானம் பெற்று திகழ்ந்தது. ஒரு நாள் சங்கரரின் தந்தையார் வெளியே சென்று ஊர் திரும்பிட தாமதமாயிற்று. அங்கு அருகிலிருக்கும் காத்யாயணி கோயிலில் நாள்தோறும் அவர்கள் பூஜை செய்வது வழக்கம்.

அன்று தந்தையார் வருவது தாமதமானதால் காத்யாயணி கோயிலில் செய்ய வேண்டிய நித்திய பூஜையைச் சிறு பாலகன் சங்கரர் செய்ய வேண்டியது ஆயிற்று. அவர் பூஜைகளை முடித்து ஒரு பாலன்ன கிண்ணத்தைத் தேவியிடம் சமர்ப்பித்தார். தேவி மீதம் ஏதும் வைக்காமல் பாலன்னம் முழுவதையும் அருந்தினார். அதனைக் கண்ட சங்கரர், “அன்னையே, பிரசாதமாய் துளியளவு கூட பாலன்னத்தை வைக்காமல் அருந்திவிட்டனை, தந்தையார் வந்து கேட்டால் என்ன செய்வது” என்று வருந்தி வேண்டினார்.

குழந்தையின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து தேவி தனது திருமுலைப் பாலைச் சுரந்து சங்கரரிடம் வழங்கி அருளினார். அன்னையின் அந்த தெய்வீகப் பாலை அருந்திய சங்கரர் மிகுந்த ஞானம் பெற்று மூன்று வயதிலேயே கவிபாடும் திறம்பெற்றார். இந்த நிகழ்வைச் சங்கரர் தனது சௌந்தர்யலஹரியில் குறிப்பிட்டுள்ளார்.

*தவஸ்தன்யம் மன்யே*
*தரணிதரகன்யே ஹ்ருதயத:*
*பய: பாராவார: பரிவஹதி*
*ஸாரஸ் வதமித*

*தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு:*
*ஆஸ்வாத்ய தவயத்*
*கவீனாம் ப்ரௌடானா*
*மஜனி கமனீய: கவயிதா.*

தேவியே, உனது ஞானப்பாலை அருந்திய இந்தத் திராவிடக் குழந்தை மாபெரும் கவிஞர்கள் இடையில் இனிய கவிபாடும் புலவனாகி விட்டான் என்று சௌந்தர்யலஹரியில் திராவிட சிசுவாய் தம்மைத்தாமே ஆதிசங்கரர் குறிப்பிட்டு உள்ளார்.



இந்த நிகழ்வைச் சிலர் திருஞானசம்பந்தர் வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆதிசங்கரர் காலத்தை வேறு விதமாகவும் குறித்துள்ளனர். இவரது தோற்றம் பொது ஆண்டுக்குப் பிந்தைய ஆண்டு 788 என்றும் குறிப்பிடுகின்றனர். இந்தக் காலத்தில் சைவமும், வைணவமும் தழைத்தோங்கியது. புத்தம், சமணம் வளமை குன்றியிருந்தது. ஆனால், ஆதிசங்கரர் காலத்தில் புத்தமும், சமணமும் பரவி இருந்தது. புத்த சமண அறிஞர்களை வாதில் வென்று சங்கரர் வேத நெறியைப் பரப்பினார். மேலும், திருஞான சம்பந்தருக்கு முன்பிருந்த பல்லவர் கால திருக்கோயில்களில் மணற்கற்களா லான ஆதி சங்கரர் சிற்பங்கள் காணப்படுகின்றன.



எனவே சங்கர மடங்கள் பெரும்பாலும் தெரிவிக்கும் பொது ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 509 காலமே ஆதி சங்கரர் தோற்றமாகும் என்பது தெளிவு.

இந்தியாவின் வடகோடியில் உள்ள காஷ்மீரம் ஸ்ரீநகரில் தாக்தி சுலைமான் மலை எனும் மலை ஒன்று உள்ளது. இது சங்கராசார்ய மலை என்று வழங்கப் படுகின்றது. இம்மலை மீது ஆதிசங்கரர் திருக் கோயில் உள்ளது. இது ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று ஆய்வறிஞர் பலர் கருதுவர். அசோக மாமன்னனின் பேரனாகிய ஜலௌகா என்பவன் பொது ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 220 – ஐ ஒட்டி இங்கு ஆதிசங்கரர் திருக்கோயிலைக் கட்டினான் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

சங்கரர் நான்காவது வயதில் தந்தையை இழந்தார். அவருக்கு ஐந்து வயதில் உபநயன சடங்குகளைச் செய்தனர். குருகுலம் சேர்த்தனர். குரு குலத்தில் அனைத்து வேதங்களையும் அவர் கற்றறிந்தார். காலடியில் சங்கரரின் வீட்டிலிருந்து தொலைவில் பூர்ணா நதி ஓடியது. அவரது தாயாரின் பொருட்டு அந்த நதியைத் தனது வீட்டினருகே மாறியோடுமாறு சங்கரர் செய்தார். அவர் துறவு கொள்ளும் பொருட்டு ஒரு நாள் சிவபெருமானார் திருவிளையாடல் ஒன்றைச் செய்தார். சங்கரர் ஆற்றில் நீராடிக் கொண்டிருக்கையில் கந்தர்வன் ஒருவன் முதலையாய் உருமாறி அவரது காலைக் கவ்வி இழுத்தனன். அதனைக்கண்டு அவரது தாய் பதறினாள். தான் துறவு கொண்டால் மட்டுமே மீள முடியும் என்றும், அதற்கான அனுமதியை வழங்குமாறும் சங்கரர் கேட்க, வேறு வழியின்றி

அவரது தாய் இசைந்தனள். அக்கணமே முதலை ஆற்றில் மறைந்தது. அவ்வமயம் சங்கரர் மும்முறை ஆற்றில் மூழ்கியெழுந்து துறவறம் மேற்கொண்டார்.

பின்னர் தாயிடம் அனுமதிபெற்று அத்வைத ஞானம் பெறவும், வேத கருத்துகளைப் பரப்பிடவும் காலடியிலிருந்து புறப்பட்டு நர்மதை நதிக்கரையில் ஸ்ரீகோவிந்த பகவத்பாதரைச் சந்தித்து தனது குருவாய் ஏற் றார். காவியுடை அணிந்து திரிதண்டம் ஏந்தி உலக நன்மைக்காக முழுமை பெற்ற சந்நியாசி ஆனார். அத்வைதம் எனும் உண்மை செல்வத்தைக் குருவிடம் பெற்று, அத்வைத கருத்துகளைப் பரப்பிட அங்கிருந்து காசியை அடைந்து, கங்கையில் மூழ்கி எழுந் தார். அவரது திருமேனி ஞானத் தீப்பிழம்பாய் தோற்றம் அளித்தது. அங்கிருந்தோர் பலர் சீடனாயினர்.

கங்கைக் கரையில் சீடர்களுடன் சங்கரர் வந்து கொண்டிருந்தபோது, எதிரில் அழுக்கு ஆடைகளுடன் ஒருவன் நான்கு நாய்களுடன் வந்தான். அவனைக் கண்ட சங்கரர் விலகிப்போ என்றார். அதற்கு அவன், "அறிஞரே, விலகிச் செல்லும்படி தாம் கூறுவது தேகத்தைப் பற்றியா, ஆத்மாவைப் பற்றியா" என்று கேட்கவும், மேலும் ஆத்மஞானம் பெற்று அந்த அழுக்காடை உடுத்தியவரின் காலில் விழுந்து சங்கரர் வணங்கினார். அக்கணம் அழுக்காடை அணிந்தவர் மறைந்து காசி விஸ்வநாதர் காட்சியருளினார்.

காசியில் சங்கரர் பல நூல்களுக்குப் பாஷ்யம் செய்த பின் குமாரில பட்டரைச் சந்தித்தார். மண்டன மிச்ரர், சரசவாணி ஆகியோரை வாதில் வென்று புறச் சமய கருத்துக்களை மறையச் செய்தார். அத்வைத கருத்துக்களைப் போதித்திட பூரியிலும், துவாரகையிலும், பத்ரியிலும், சிருங்கேரியிலும் மடங்களைத் தாபித்தார். பிறகு காஞ்சிபுரத்தில் காமகோடி பீடத்தை ஸ்தாபித்து அங்கு தானே முதல் குருவாய் அருள்பாலித்து அன்னை காமாட்சி தேவியைப் பணிந்து தனது 32வது அகவையில் சித்தி பெற்றார்.

அன்னையின் ஞானப்பால் அருந்திய ஆதி சங்கரர் பல நூல்களையும், ஸ்தோத்திரங்களையும், பாஷ்யங்களையும் அருளிச் செய்துள்ளார். தத்துவ அர்த்த நூல்கள் 54, ஸ்தோத்திரங்கள் 79, பாஷ்யங்கள் 23 ஆகியவற்றை அவர் செய்தருளினார் என்பர். வேதங்களின் உண்மைக் கருத்தாகிய அத்வைதத்தைப் போதித்தருளிய ஆதிசங்கரரின் திருவடிகளைப் போற்றி ஆத்ம ஞானம் பெற்று இறைவனுடன் ஒருமை பெறுவோம்.

**– திரு. சோ. செந்தில்குமார், காஞ்சிபுரம்,**
**93400 91600**

## ஸ்ரீஸ்ரீநிவாச– ஸ்ரீபத்மாவதி பரிணய மஹோத்ஸவம்



ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீநிவாசராக திருவேங்கட மலையில் உள்ள நாராயண கிரியில்தான் முதன் முதலாக வந்து தங்கியதாக ஐதீகம். இங்குதான் பத்மாவதியும் பெருமாளும் முதன்முதலில் சந்தித்து, காந்தர்வ விவாஹம் புரிந்து கொள்ள அதன் பின்னர் வெகு விமரிசையாக பத்மாவதி பரிணயம் என்ற ஸ்ரீநிவாச–ஸ்ரீபத்மாவதி திருக்கல்யாணம் நடைபெற்றது. ஸ்ரீஸ்ரீநிவாசன் ஸ்ரீபத்மாவதி தேவியைப் பரிணயம் பண்ணிய பவித்ர புண்ய பிரதேசமாக இந்த நாராயணகிரி திகழ்கிறது.

ஸ்ரீபத்மாவதி தேவி பரிணய உத்ஸவத்தின் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் கற்பனை நயத்தோடும் முழு கவனத்தோடும், ஈடுபாட்டோடும் தேவஸ்தான நிர்வாகம் அமைக்கும் அலங்காரங்கள் அனைவரின் கண்களுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாக அமைவதோடு, தெய்வீகத் திருமணத்தைக் கண்ணாரக் கண்டு தரிசிக்கும் ஒவ்வொரு தம்பதியும் கருத்தொருமித்த தம்பதியாக வாழ்க்கை நடத்துவதற்கு இந்த உத்சவம் ஒரு தூண்டுகோலாக அமைகிறது என்றும் கூற வேண்டும். திருமணத்திற்காகக் காத்திருப்போர் அனைவருக்கும் இந்த உத்ஸவ தரிசனம் விரைவில் திருமண பாக்கியத்தை அருளும் என்பதே நிதர்சனம். இந்த ஆண்டு ஸ்ரீஸ்ரீநிவாச பத்மாவதி தேவி பரிணயோத்ஸவம் 06.05.2025 முதல் 08.05.2025 வரை நடைபெறும்.

**புராண வரலாறு :**

குசிகமகரிஷி கேட்க புலஸ்தியரிஷி பதில் சொல்கிறார்: சரஸ்வதி நதிக்கரையில் தவம் செய்தபோது, அவருக்குப் பணிவிடை செய்த ஒரு கன்னிப் பெண் முனிவரின் காலத்திற்குப் பின்பு, தானும் அத்தவத்தைச் செய்ய, அதனைக் கண்ட நாரதர், "நீ திருமணம் செய்து கொண்டு பிறகு உய்வதற்கான வழியைத் தேடு" என்று கூறினார்.

"இந்த முதிர்ந்த வயதில் தாமாகவே யாராவது சம்மதித்தால் யான் மணந்து கொள்வேன்" என்று அப்பெண் கூற, அவள் நிலைக்கு இரங்கி, காவலர் என்ற ரிஷி அவளை மணந்தார். அதன் விளைவாக முந்நூற்று அறுபது பெண் குழந்தைகள், அவர்களின் தவ ஆற்றலால் பிறந்தனர். குழந்தைகளைக் காக்கும் பொறுப்பைக் கணவனிடம் விட்ட அப்பெண், சத்திய லோகம் போனாள்.

360 குழந்தைகளைக் காக்கும் முயற்சியில், காவலர் மிகுதியாகத் துன்புற்று வருந்தினார். அவரைக் கண்ட ரிஷிகள் இரங்கி, யக்ஞ வராக மூர்த்தியாக, ஆதி வராகப் பெருமாள் உறையும் தலத்திற்குச் செல்லுமாறு சொல்லவும், அவர் அப்பெண் குழந்தைகளுடன், இத்தலத்தை அடைந்தார். பருவ வயதை அடைந்த இப்பெண்களின் திருமணத்தை நிகழ்த்தி அருளுமாறு பகவானை வேண்டுகிறார்.

பகவான், தானே மணப்பதாகச் சொல்ல, காவலர் அவரை யார்? என்று கேட்க, தான் காச்யப கோத்திரத்தைச் சார்ந்த அந்தணன் என்றும், பூரி ஜகந்நாதம் என்ற தலத்திலிருந்து வருவதாகவும், அனைத்துக் கன்னியரையும் தானே மணப்பதாகவும் கூறினார்.

முனிவரும் இசைந்து ஒரு நாளில் ஒரு பெண் வீதம், ஓர் ஆண்டு முழுவதும் ஒவ்வொருவருக்கும் திருமணம் நிகழ்த்தி நிறைவு நாளில், எம்பெருமான் தன் அருளால் அவர்கள் எல்லோரையும் ஒரே பெண்ணாக மாற்றி, யக்ஞ வராக மூர்த்தியாகக் காவலருக்குத் தரிசனம் தந்தார்.

360 பெண்களும், ஒருத்தியாக மாற, அகில வல்லித் தாயார் என்ற திருநாமம் வருகிறது. ஓர் ஆண்டு முழுவதும் திருமணம் நிகழ்த்திக் கொண்டதால், நித்ய கல்யாணப் பெருமாள் என்று இப்பகவான் கொண்டாடப் படுகிறார்.

# திருவிடவெந்தை (திருவிடந்தை)

94



– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்





*தத்ரத்யபூர்ணம் வரத$_3$ாந்தரங்க$_3$ம்*
*வர்ணாச்ரமாசாரவித$_4$ாயகம் தம் ।*
*ஸம்ப்ரார்த்த$_2$யச்சித்தக$_3$தம் மமார்த்த$_2$ம்*
*ஜ்ஞாத்வா கரீசாத்$_3$வத$_3$தே$_3$சிகேதி ॥* (39)

**அக்காஞ்சியிலிருந்தவராய், வர்ண ஆச்ரமாசாரங்களைத் தாமும் அனுஷ்டித்துப் பிறரையும் அனுஷ்டிக்கச் செய்பவராய், வரதனுக்கு அந்தரங்கராய், (திருவாலவட்ட கைங்கர்யம் செய்யும்) திருக்கச்சி நம்பியைப் பார்த்து, “நம்பியே! நான் நெஞ்சில் கொண்டுள்ள அர்த்தங்களைத் தேவப் பெருமாளிடமிருந்து அறிந்து, அவை பெருமாள் உகந்தவையா என்பதை எனக்குச் சொல்லுவீர்” என்று பிரார்த்தித்தார்.**

**– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**

நித்ய கல்யாண புரி என்றும் இத்திவ்ய தேசத்திற்குப் பெயர் உண்டு. அகிலவல்லித் தாயார், பெரிய பிராட்டியாகிய திருமகளின் வம்சம் ஆனதால், வடமொழியில் ஸ்ரீபுரி என்ற பெயரும் உண்டு. பெண்களில் முதல் பெண்ணிற்கு, கோமள வல்லி என்ற பெயர் இருந்ததால், தனிக்கோயில் தாயாருக்கு கோமளவல்லித் தாயார் என்ற திருப்பெயர் உண்டு. விமானத்திற்குக் கல்யாண விமானம் என்றும், தீர்த்தத்திற்கு கல்யாண தீர்த்தம் என்றும், பிராட்டியைத் தன் இடப்பக்கத்தில் அணைத்து, “வராக சரம சுலோகம்” என்ற உயர்ந்த மந்திரத்தை உபதேசம் செய்யும் பாங்கில், யக்ஞ வராகன் அமர்ந்திருப்பதால், திரு இட எந்தை என்று அழைக்கப்படுகிறது.

எம்பெருமானின் எளிமையை “ஸௌலப்யம்” என்பர். மேன்மையை “பரத்வம்” என்பர். ரிஷிகளின் இடையில், எம்பெருமானிடம் உள்ள குணம், எளிமையா அல்லது மேன்மையா என்று விவாதம் எழுந்தபோது, அங்கு வந்த நாரதர், “எம்பெருமானிடம்! உள்ள பண்பு இல்லாமல், மனத்தில் கலக்கத்திற்கு ஆளானார். மேன்மையே என்று கூறினார். அதன் பின்பு நாரதரிடம் இந்நிலைக்கான காரணத்தை வினவியபோது, நாரதர் முன்பு கூறிய முடிவு தவறானது என்றும், அதன் விளைவே இக்கலக்கம் என்றும் கூறி, எம்பெருமானின் எளிமைப் பண்பை எடுத்துக்காட்டினார்.

மாமல்லபுரத்தை ஹரிசேகரன் என்ற மாமன்னன் ஆண்டபோது, மாமல்லபுரத்திலிருந்து நாள்தோறும் அருகில் உள்ள திருவிடவெந்தை சென்று, யக்ஞ வராஹப் பெருமாளை வழிபட்டு வருவது வழக்கம். அதன் பின்பு வைணவ அடியார்களுக்கு உணவளித்து, தானும் உண்ணும் இயல்பு உடையவன். ஒரு நாள் மகாபலிபுரத்திலிருந்து, திருவிடவெந்தை புறப்படும்போது ஒரு வயது முதிர்ந்த அந்தணர், தன் கையில் ஒரு சிறுமியைப் பற்றிக்கொண்டு, தான் நீண்ட தூரத்தில் இருந்து நடந்து வந்துள்ளதால், மிகுந்த பசியோடு, தளர்ந்து இருப்பதாகவும், சிறுமியும் பசியால் மயங்கி வீழ்வதாகவும், உடனே தனக்கு உணவளிக்குமாறும் வேண்ட, தான் திருவிடந்தை சென்று வழிபட்டு வந்து விடுவதாக மன்னன் கூற, அதுவரை உயிர் வாழவே இயலாது என்று முதியவர் கூற, தன் பயணத்தை நிறுத்தி அவர்களையே எம்பெருமானாகப் பாவித்து, அவர்களுக்கு முறைப்படி உணவு அளித்தான். உடனே முதியவரும் சிறுமியும் மறைந்தனர். பூவராஹப் பெருமாள் தரிசனம் கொடுத்தார். இந்த வரலாற்றைப் பிரமனிடமிருந்து கேட்ட நாரதரின் கலக்கம் நீங்கியது.

**சிறப்புகள் :**

முந்நூற்று அறுபது பெண்களை, முந்நூற்று அறுபது நாட்களில் மணந்த பெருமான், திருமணம் வேண்டி வழிபடுவோர்க்கு, அருளும் பெருமான் இத்தலப் பெருமாள். மூலவரின் திருவடிகளை ஆதிசேஷன் தன் மனைவியுடன் தாங்கி நிற்பதால் இப்பெருமானை வழிபடுவோர்க்கு ராகு, கேது குறைபாடுகள் நீங்கும் என்று சொல்வர். பெருமானுக்கும், தாயாருக்கும் இத்தலத்தில், தாடையில் பொட்டு இருப்பது இருவரின் மணக்கோலத்தைக் காட்டுவதால், திருமணத்தை வேண்டி வழிபடுவோரும் அந்நிலையை அடைவர்

## ஸப்தகிரி மார்ச் 2025 விடைகள்

1. மாசி, புனர்பூசம்.
2. வணங்குதல்.
3. ஆயில்யம்.
4. ஸ்ரீபத்மாவதி இருதாலயம்.
5. பாரதியார்.
6. தெள்ளியச்சிங்கர்.
7. பிராட்டியார்.
8. பஞ்சாங்கம் வாசித்தல்.
9. பெருமாள் திருமொழி.
10. விபிஷணன்.
11. சோட்டானிக்கரை.
12. கிளிச்சோழன்.
13. நாகுலாபுரம்.
14. இராமாநுஜர்.
15. கமலவல்லித்தாயார், திருவுறையூர்



வினாடி வினா

## போட்டி எண். 32

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி பிரேமித்ரா
   குபேரன் தெரு,
   விழுப்புரம் மாவட்டம்.
2. செல்வன் வேதாந்த்,
   அடையார், சென்னை.
3. செல்வி ஆத்மிகா
   ராஜரத்தினம் தெரு,
   சேலம் மாவட்டம்.

என்பதைக் காட்டும். குறிப்பாக அதனைக் கருதுவர். "அசுரகுலகாலநல்லூர்" என்றும், "வாமகவீபூரி" என்றும் இது அழைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | லக்ஷ்மீ வராகப்பெருமாள் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| உத்ஸவர் | : | நித்ய கல்யாணப் பெருமாள். |
| தாயார் | : | கோமளவல்லி நாச்சியார். |
| விமானம் | : | கல்யாண விமானம். |
| 4ம்6ம்தீர்த்தம் | : | கல்யாண தீர்த்தம், வராக தீர்த்தம். |
| விமானம் | : | கல்யாண விமானம் |
| தலவிருட்சம் | : | புன்னை மரம். |
| ப்ரத்யக்ஷம் | : | மார்க்கண்டேயர், மகாபலி, காலவமாமுனிவர். |
| ஆகமம் | : | வைகானசம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம்**

திருமணம் வேண்டுதல் உடனே நிறைவேறும் திருத்தலம்.

**த்யானச்லோகம் :**

*கல்யாணாக்யே விமாநே ஸகலஸுரநுதே பேதநாம்*
*நாது புர்யாம்-*
*திஷ்டந் கல்யாண தீர்த்தாச்ரய தலருசிரே நித்ய*
*கல்யாண நாமா*
*மார்ககண்டேய ப்ரஸந்நோ வருண மபிமுகோ*
*நித்யகல்யாண காரீ*
*ஸ்ரீமான் விஷ்ணுச்ச லக்ஷ்மீர் திசதுஜடிதிந:*
*கோமளா மங்களாநி*

**பாசுரம்**

*திவளும் வெண்மதிபோல் திருமுகத்து அரிவை*
*செழுங்கடல் அமுதினில் பிறந்த*
*அவளும் நின் ஆகத்து இருப்பதும் அறிந்தும்*
*ஆகிலும் ஆசை விடாளால்*
*குவளை அம்கண்ணி கொல்லி அம்பாவை*
*சொல்லு நின்தாள் நயந்து இருந்த*
*இவளை உன் மனத்தால் என் நினைந்து*
*இருந்தாய்? இடவெந்தை எந்தைபிரானே!*

– திருமங்கையாழ்வார்

*நின்று திரியும் பிறவி எல்லாம் நேர்வித்துக்*
*கொன்று திரியும் கொடுவினையார் - இன்று*
*வெருவிட எந்தைக்கே விழுமிய தொண்டு*
*ஆனென்*
*திருவிட வெந்தைக்கே செறிந்து*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*891. ஓம் நைகத: நம:*

ப்ரம்மாலங்காரங்களை முக்தனுக்கு அளிப்பவன்.

ஓம் சிகா: நம:

பகவானுக்குத் தன்னுடைய நேர்த்தியால் பெருமையை உண்டாக்குபவள்.

892. ஓம் அக்ரஜ: நம:

முக்தர்களுக்கு சகல ஐச்வர்யங்களுடன் தோற்றமளிப்பவன்.

ஓம் ப்ரக்ருதி: நம:

சிறந்த செய்கைகளைச் செய்பவள்.

893. ஓம் அநிர்விண்ண: நம:

பக்தன் முக்தி அடைந்த பின்பு, கவலையின்றி இருப்பவன்.

ஓம் கோமதீ: நம:

நல்ல வாக்குகளை உடையவள்.

894. ஓம் ஸதாமர்ஷீ நம:

முக்தன் செய்யும் சேவைகளை ஏற்பவன்.

ஓம் லீலா: நம:

மகிழ்ச்சி அடையச் செய்பவள்.

895. ஓம் லோகாதிஷ்டாநம் நம:

மேல் உலகங்கட்கு ஆதாரமானவன்.

ஓம் கமலா: நம:

தாமரை வாஸிநி.

896. ஓம் அத்புத: நம:

புதிதாகக் காணும் அற்புதம் போன்றவன்.

ஓம் காமதுக் நம:

விரும்பியதை அன்புடன் கொடுப்பவள்.

897. ஓம் ஸநாத் நம:

முக்தர்களால் அநுபவிக்கப்படுபவன்.

ஓம் விதி: நம:

ஹிதத்தைச் செய்யும்படி வற்புறுத்துபவள்.

898. ஓம் ஸநாதநதம: நம:

என்றென்றும் புதியவனாகத் தோற்றம் அளிப்பவன்.

ஓம் ப்ரஜ்ஞா: நம:

அழிவற்ற ஞானஸ்வரூபி.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம்



| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 10-05-2025 | சனி | --- | அங்குரார்ப்பணம் |
| 11-05-2025 | ஞாயிறு | துவஜாரோஹணம் | பெரியசேஷ வாகனம் |
| 12-05-2025 | திங்கள் | சிறியசேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 13-05-2025 | செவ்வாய் | முத்துப் பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 14-05-2025 | புதன் | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 15-05-2025 | வியாழன் | மோகினி அவதாரம் | கருட சேவை |
| 16-05-2025 | வெள்ளி | சர்வ பூபால வாகனம் | கல்யாணோத்ஸவம், யானை வாகனம் |
| 17-05-2025 | சனி | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 18-05-2025 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 19-05-2025 | திங்கள் | சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |
| 20-05-2025 | செவ்வாய் | --- | புஷ்பயாகம் |

*899. ஓம் கபில: நம:*

நித்ய விபூதியில் விளங்குபவன்.

*ஓம் ராமா: நம:*

யோகிகளுக்கு ஆனந்தத்தை அளிப்பவள்.

*900. ஓம் கபிரவ்யய: நம:*

மாறுதல் இல்லா சுகத்தை அநுபவிப்பவன்.

*ஓம் பரா: நம:*

தனக்கு மேல் ஒருவருமின்றி யாவரிலும் மேம்பட்டவள்.

*ஸ்ரீமதே கோமளவல்லீ நாயிகா அகிலவல்லீ நாயிகா ஸமேதாய ஸ்ரீநித்ய கல்யாண ரூப (உத்ஸவ மூர்த்தி) ஸமேத ஸ்ரீஆதிவராஹ (மூலவர்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

சென்னை – மாமல்லபுரம் சாலையில் 43 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இத்திருத்தலத்திற்குச் செல்ல பேருந்து வசதியும் உள்ளது.

*தொடர்ந்து தரிசிப்போம்...*



# ஸ்ரீ கோனேடிராய ஸ்வாமி, கீலபட்லா

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 04-05-2025 | ஞாயிறு | -- | அங்குரார்ப்பணம் |
| 05-05-2025 | திங்கள் | துவஜாரோஹணம் | பெரியசேஷ வாகனம் |
| 06-05-2025 | செவ்வாய் | சிறியசேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 07-05-2025 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 08-05-2025 | வியாழன் | கல்பவிருக்ஷ வாகனம் | சர்வபூபால வாகனம் |
| 09-05-2025 | வெள்ளி | மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 10-05-2025 | சனி | அனுமத் வாகனம் | |
| | | மாலை:வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 11-05-2025 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 12-05-2025 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 13-05-2025 | செவ்வாய் | சக்கரஸ்நானம் துவஜாவரோஹணம் | திருச்சி உத்ஸவம், |

சித்தூர் மாவட்டம் பலமனேருக்கு அருகில் கங்க வரம் மண்டலத்திலுள்ள சிறு கிராமமே “கீலபட்லா” ஆகும். திருமலை ஸ்வாமி போன்றிருக்கும் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிருகு மகரிஷியால் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீவைகானச ஆகமப்படி நித்ய பூஜைகள், மாதோத்ஸவங்கள், வருடாந்திர உற்சவங்கள் அனைத்தும் இங்கும் நடைபெறுகின்றன. திருவோண நட்சத்திரத்தில் சிறப்பு பூஜை, ஆஸ்தானம், வீதி புறப்பாடும், தை மாதத்தில் வரும் “இரத சப்தமி” அன்று சூரியப் பிரபை வாகனத்தில் எழுந்தருளுதல், சித்திரையில் வசந்தோத்ஸவம், வைகாசியில் பிரம்மோத்ஸவம் ஆகியவை கோலாகலமாக நடைபெறுகிறது. இந்த ஆலயத்தை திருமலை திருப்பதி தேவஸ்தானம் 18-11-2012ல் தங்கள் ஆதினத்தில் எடுத்துக் கொண்டு, ஸ்வாமிக்கு நித்யபடி ஆராதனைகளை முறையாக நடைபெறவும், பக்தர்கள் வந்து எளிதாக தரிசிக்கவும் அத்துனை ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.







### அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமானுசர்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி
வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

சென்ற இதழின் தொடர்ச்சி...

(தெண்டிரைசூழ் பூதூரெம்பெருமானார் வாழியே) இராமாநுசர் அவதரித்த ஸ்ரீபெரும்பூதூருக்கு வடமொழிப் பெயர் பூதபுரி ஆகும். பூத கணங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சாபத்தைப் போக்க பெருமானை வேண்டியதன் பயனாக, பெருமான் ஆதிசேஷனை அழைத்து ஒரு குளம் வெட்டச் சொன்னார். ஆதிசேஷனும் திருப்பாற்கடலுக்கு ஒப்பான தெளிந்த நீரையுடைய ஒரு பொய்கை உண்டாக்கியதால் அது அனந்த ஸரஸ் என்று பிரஸித்தி பெற்றது. அதில் நீராடி பூத கணங்கள் சாபத்தைப் போக்கிக் கொண்டன.

பூத கணங்களின் சாபம் போக்கிய நல்லூராதலால் பூதூர் எனப்பட்டது. அப்படிப்பட்ட பூதூரில் உலகுக்கு ஆசார்யராய் எம்பெருமானார் அவதரித்தாராகையால் பெரும்பூதூர் என்று அழைக்கப்பட்டது. தாரணிக்கும் விண்ணுலகுக்கும் நாயகராகிய செல்வத்தைப் பெற்றதால் ஸ்ரீபெரும்பூதூராயிற்று என்பர். சரம சுலோகப் பொருளை உலகுக்குத் தந்தவராகையால் திருக்கோட்டியூர் நம்பிகள் இராமாநுசருக்கு எம்பெருமானார் என்ற பெயரைச் சூட்டினார். அப்படிப்பட்ட எம்பெருமானார் பல்லாண்டு வாழ வேண்டும்.

(சித்திரையில் செய்ய திருவாதிரையோன் வாழியே) ''சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை'' என்றும், ''சித்திரையில் செய்ய திருவாதிரை'' என்றும், ''இந்தத் திருவாதிரைதன்னின் சீர்மை'' என்றும் பலபடியாகப் போற்றுவர் மாமுனிகள். சித்திரை மாதத்தோடு கூடிய திருவாதிரை நக்ஷத்ரத்தோடு பக்கத்தில் அண்மையான நக்ஷத்ரமுமாயிற்று.

இவரும் ஸ்ரீமான் இளையாழ்வாரன்றோ. இராமன், அவன் தம்பியான இளையபெருமாள் இருவருக்கும் முன்னாளும் பின்னாளுமான திருவாதிரையும் புனர்வசுவுமாகப் பெற்றது. இப்படி எல்லா நாள்களைக் காட்டிலும் திருவாதிரைக்கு ஏற்றமாவது அக்காலத்தில் திரிவிக்ரமன் விஜயத்துக்கு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பறை அறைந்து திரிந்தாற்போலே, நக்ஷத்ர வைபவத்தை உலகறிய பிரசித்தமாம்படி பறை சாற்றுவதாக அனுபவிப்பர் மாமுனிகள். இதுவும் ஒரு நாளே. ''ஸ்ரீமாந் ஆவிர்பூதபூமௌ ராமாநுஜ திவாகர'' என்று சொல்லவேண்டுமன்றோ.

மேலும், சூரியனானவன், திருவாதிரை நக்ஷத்ரத்தில் பிரவேசம் பண்ணினாற்போலே ஆயிற்று ராமாநுஜரும் திருவாதிரையிலே

உதித்தருளினபடி. அப்போதன்றோ பயிர்கள் எல்லாம் நிலை செய்வது. இங்கும் அப்படி ஆயிற்று. ஆத்மாவாகிற பயிர்கள் எல்லாம் அறிவு பிரகாசம் செய்ததும், *''சூரியனால் உண்டாவது மழை''* என்று பிரம்மாண்ட புராணம் கூறும்.

அதுபோல இங்கும் கருணை மழை உண்டன்றோ. மலர் மலரும் போதான சித்திரை மாதத்தில் அழகிய திருவாதிரை அல்லவா அவதரித்தருளிற்று. திருவாதிரை நக்ஷத்திரம் சிவந்து இருக்கும். சிவந்த வடிவையுடைய ஸ்ரீமான் அவதரிக்கையாலே அதுவும் அப்படியே ஆயிருக்கை. சிவப்பான ஓர் சூரியனின் தன்மை ஆயிற்று ராமாநுஜர் தன்மையும். இதுபற்றியே ஆளவந்தார் இராமாநுசரைக்காண காஞ்சிக்கு வந்தபோது திருக்கச்சிநம்பிகள், *''சிவந்து வலிய நெடியராய்''* இருந்த இருப்பைக் காட்டினாரல்லவா. இதுபற்றியே செய்ய திருவாதிரையோன் எனப்பட்டது. அப்படிப்பட்ட பெருமையுடைய இராமாநுசர் அவதரித்த நாளைக் கொண்டாடுவோமாக.

*இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்...*





**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் வஸந்தோத்ஸவம்**

குளிர்ச்சியை அளிக்கும் சந்திரனின் சகோதரியான திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு வஸந்தோத்ஸவம் 09-05-2025, வெள்ளிக் கிழமை அன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி, 10-05-2025 சனிக்கிழமை வஸந்தோத்ஸவம் ஆரம்பமாகிறது. 11-05-2025 ஞாயிற்றுக்கிழமை தங்கத் திருத்தேரில் தாயார் திருவீதி உலா வந்து, 12-05-2025 திங்கட்கிழமை அன்று இனிதே வஸந்தோத்ஸவம் நிறைவடைகிறது.



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

23. ஸ்ரீமந்மஹாபூதபுரியில் பகவத் ராமாநுஜருடைய திவ்ய மங்கள திருமேனியைப் (தான் உகந்த திருமேனி) பிரதிஷ்டை செய்திட்ட பூர்வாசார்யர் யார்?
கந்தாடை ஆண்டான்

24. கையில் ப்ரயோக சக்ரத்தைத் தரித்த பெருமாள் எழுந்தருளி இருக்கும் ஏதாவது மூன்று திவ்ய தேசங்களின் பெயரைத் தெரிவியுங்கோள்?
ஸ்ரீரங்கம், திருநறையூர், திருவெள்ளறை.

25. உடையவர் எந்த திவ்ய ப்ரபந்தத்துக்குத் தனியன்கள் அருளிச் செய்தார்?
1.பெருமாள் திருமொழி, 2.பெரிய திருமொழி, 3. பெரிய திருவந்தாதி, 4.திருவெழுகூற்றிருக்கை.

26. பெரிய கோயில் நம்பி என்ற திருநாமத்தை உடைய கூரத்தாழ்வான் சீடர் யார்?
திருவரங்கத்து அமுதனார்.

27. திருவாய்மொழிக்கு ஈடு முப்பதாறாயிரப்படி வ்யாக்யானம் வடக்குத்திருவீதிப் பிள்ளையிடம் இருந்து மணவாளமாமுனிக்கு வந்து சேர்ந்த ஆசார்ய குருபரம்பரை என்ன?
நம்பிள்ளை - வடக்குத் திருவீதிப்பிள்ளை - ஈயுண்ணி மாதவாசார்யர் - ஈயுண்ணி பத்மனாபாசார்யர் - நாலூரான் பிள்ளை - நாலூராச்சான் பிள்ளை - திருவாய்மொழிப் பிள்ளை - மணவாள மாமுனிகள்.

28. அநந்தாழ்வான் அவதரித்த திருவவதார ஸ்தலம் எது?
சிறுபுத்தூர்/கிரங்கனூர் (கர்நாடக மாநிலம்)

**– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

*திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்*



# தொண்டு செய்யத் துடிக்கும் நெஞ்சம்

**- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963**

திருமங்கையாழ்வார் பெருமாளிடமிருந்து திருமந்திர அர்த்தத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு, தமது முதல் பிரபந்தமான பெரிய திருமொழியைத் தொடங்குகின்றார்.

இதற்கென்றே ஒரு உத்ஸவம் சீர்காழி திருநகரியில் பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்திற்கு முதல் நாள் இரவில் நடைபெறுகின்றது. வேடுபரி உற்சவம் என்பார்கள். ஆழ்வாரின் ஞான உற்சவம் என்பார்கள். (ஜனன உற்சவம் கார்த்திகையில் கார்த்திகை).

பெரிய திருமொழி முதல் திருமொழியில் **“நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்”** என்று தொடங்கியவர். அந்த நாராயண நாமத்தின் விரிவுதான் பற்பல திவ்ய தேசங்களிலே அர்ச்சா அவதார வைபவமாக, பின்னானார் வணங்கும் ஜோதியாக “சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது” என்பதைக் காட்டுவதற்காக தம்முடைய ஆடல்மா குதிரையின் மீது ஏறி திவ்ய தேச மங்களாசாசனத்தைத் தொடங்குகிறார்.

வடநாட்டு திவ்ய தேசமான திருப்பிரிதி தொடங்கி, தென்னகம் நோக்கி ஒவ்வொரு திவ்ய தேசமாக மங்களாசாசனம் செய்து கொண்டே வருகின்றார். முதல் பத்து எட்டாம் திருமொழி தொடங்கி, திருவேங்கட தரிசனத்தை நமக்குக் காட்டுகின்றார்.

இரண்டாம் பத்து முதல் திருமொழியில் தம்முடைய நெஞ்சைப் பார்த்துச் சொல்லுகின்றார். “நெஞ்சே! நீ தீய வழிகளில் சென்று துன்பப்படாமல், திருவேங்கடமுடையானை அடைந்து, அவனுக்குத் தொண்டு செய்யும் அற்புதமான வாய்ப்பைப் பெற்றாயே, நீதான் எத்தனை பாக்கியம் செய்திருக்கிறாய்?” என்று தம்முடைய நெஞ்சைப் பாராட்டுகின்றார்.

எந்த விஷயமாக இருந்தாலும் ஒருவருக்கு அவனுடைய நெஞ்சு ஒத்துழைக்கவில்லை என்றால் எந்தக் காரியத்தையும் பூர்த்தியாகச் செய்ய முடியாது. உலகியலில் கூட மன ஒருமைப்பாடும் ஒரே நிலைச் சிந்தனையும், இருந்தால்தான் அந்தக் காரியம் ருசிக்கும்.

உதாரணமாக நாம் கோயிலுக்குப் போகிறோம். ஸ்வாமிக்கு திருமஞ்சனம் நடந்து கொண்டிருக்கிறது. கண்கள் பார்க்கின்றன. அங்கே ஓதும் மந்திரத்தையும், அருளிச் செயலையும் காதுகள் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இரு கரங்களும் தீபாராதனைக் காட்டும்பொழுது இணைந்து அஞ்சலி செய்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், இந்த மனம் வேறெங்கோ இருக்கிறதே?

“இங்கே பார், எத்தனை அற்புதமான திருமஞ்சனமும், தீபாராதனையும் நடந்து கொண்டிருக்கிறது” என்று மனதைத் திருப்பி, நாம் சொல்லச் சொல்ல, மனம் வேறு ஏதோ சிந்தித்துக் கொண்டிருக்கிறதே!

இந்த மனத்தை வைத்துக் கொண்டு நாம் எப்படி முழுமையான பூஜையைச் செய்ய முடியும்? ஆனால், மனம் மட்டும் ஒத்துழைத்து, அந்த

## தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வரஸ்வாமி தெப்போத்ஸவம்

**ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டத்தில் தேவுனிகடபா திருத்தலம் அமைந்துள்ளது. இங்கு கொலுவீற்றிருக்கும் ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு 10-05-2025 சனிக்கிழமை அன்று துவங்கி 12-05-2025 திங்கட்கிழமை அன்று நிறைவடையும் விதத்தில் தெப்போத்ஸவம் மூன்று நாட்கள் மிகவும் வைபவமாக நடைபெறும்.**



விஷயத்தில் ஈடுபட்டு விட்டால், நம்முடைய கைகள் கூப்பி அஞ்சலி செய்யாவிட்டாலும், ஆலயத்தில் இல்லாவிட்டாலும், ஆலயத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை நம்முடைய கண்கள் காணாவிட்டாலும், அங்கே ஓதப்படுகின்ற மந்திரங்களையும் திவ்ய பிரபந்தங்களையும் நம் காதுகள் கேட்காவிட்டாலும் நம் உடைய மனது இத்தனையும் அனுபவித்து கொண்டிருக்குமே!

*காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர,*
*ஓண விழவில் ஒலியதிர - பேணி*
*வருவேங் கடவா என் னுள்ளம் புகுந்தாய்*
*திருவேங் கடமதனைச் சென்று.*

என்று இந்த அனுபவத்தை திருமழிசை ஆழ்வாரும் பதிவு செய்திருக்கிறார். இந்த அனுபவத்துக்கு உள்ளத்தின் ஒத்துழைப்பு அவசியம். ஆனால், பெரும்பாலான நேரத்தில் பெரும்பாலானவர்களுக்கு இந்த உள்ளம் ஒத்துழைக்காது. ஏன், இப்பொழுது நெஞ்சைப் பாராட்டுகின்ற திருமங்கை ஆழ்வாரே திருக்குறுந்தாண்டகத்தின் ஒரு பாடலில் நெஞ்சைக் குறித்து வேறு விதமாகப் பாடுகின்றார்.

*உள்ளமோ ஒன்றில் நில்லாது ஓசையி னெரிநின் றுண்ணும்*
*கொள்ளிமே லெறும்பு போலக் குழையுமா லென்ற னுள்ளம்*
*தெள்ளியீர் தேவர்க் கெல்லாம் தேவரா யுலகம் கொண்ட*
*ஒள்ளியீர், உம்மை யல்லால் எழுமையும் துணையி லோமே.*

பெரிய வைராக்கியசாலியான அர்ஜுனன் குருக்ஷேத்திர யுத்த களத்திலே வில்லையும் அம்பையும் போட்டுவிட்டு *“சஞ்சலம் ஹி மந க்ருஷ்ண!”* “என் மனது சஞ்சலப்பட்டு கொண்டிருக்கிறது” என்கிறான். ஆனானப்பட்ட அர்ஜுனனே அவ்வார்த்தையைச் சொல்லும்போது நாமெல்லாம் எந்த மூலைக்கு! என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

காரணம் ஒரு நிமிஷம் போல் ஒரு நிமிஷம் நெஞ்சு நம்மோடு ஒத்துழைக்காது. எதிலும் நிற்காது. கெட்ட விஷயங்களையே பற்றினாலும் அவற்றிலாவது நெஞ்சு நிலைத்து நிற்கிறதோ அதிலும் தோள் மாறுகின்றது. ஒன்றிலும் நிலைத்து நிற்பதில்லை. இப்படிப் பட்ட நெஞ்சைப் படைத்திருக்கையாலே கொள்ளிக் கட்டையில் அகப்பட்டுக் கொண்ட எறும்புபோலே துடித்துப் போய் இருக்கிறேன் என்று ஆழ்வாரே பாடுகின்றார்.

ஆனால், திருவேங்கடமுடையான் விஷயத்திலே இந்த நெஞ்சு நிலைத்து நின்றதை எண்ணி நெஞ்சைப் பாராட்டுகின்றார்.நம் நெஞ்சமாக இருந்தாலும் நம்மிடத்தில் ஒத்துழைக்கும் போது பாராட்டுகின்றோம். ஒத்துழைக்காத போது உன்னோடு வாழ்வது நன்றாக இருக்கிறது போ என்று சலித்து நெஞ்சைத் திட்டுகின்றோம்.

திருவேங்கடமுடையான் விஷயத்திலே அப்படிப்பட்ட அவசியமே இல்லை. விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பாகிய அந்த ஸ்வாமியைப் பார்த்தவுடன், தண் சாரல் வீசும் திவ்ய தேசத்தில் இறங்கியவுடன் நம்முடைய மனம் முழுக்க அந்த திவ்ய தேசம் ஆக்கிரமித்து விடுகின்றதே. இதைத்தான் இரண்டாம் பத்து முதல் பாசுரத்தில் மிக அற்புதமாக தம்முடைய நெஞ்சை பாராட்டிப் பாடுகின்றார். திருமங்கையாழ்வாரின் அந்தப் பாசுரம் இது.

*வானவர் தங்கள் சிந்தை போலேன் நெஞ்சமே. இனி வந்து மாதவ*
*மானவர் தங்கள் சிந்தையமர்ந்துறை கின்றவெந்தை*
*கானவரிடு காரகிற்புகை யோங்கு வேங்கடம் மேவி மாண்குறள்*
*ஆன அந்தணற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே.*

என் நெஞ்சமே – என்னுடைய மனமே, மா தவம் – மானவர் தங்கள் சிந்தை மிக்க தவஞ் செய்தவர்களான மனிசருடைய நெஞ்சிலே அமர்ந்து உறைகின்ற, எந்தை – பொருந்தி வாழ்கின்ற ஸ்வாமியும்,



கானவர் இடு கார் அகில் புகை ஓங்கு வேங்கடம் மேவி – வேடர்கள் ஸமர்ப் பிக்கும் காரகில் புகை பரவியிருக்கப் பெற்ற திருமலையிலே வாழ்பவனும், மாண் குறள் ஆன அந்தணற்கு – வாமன ப்ரஹ்மசாரி வடிவெடுத்தவ னுமான எம்பெருமானுக்கு, வானவர் தங்கள் சிந்தை போல–நித்ய ஸூரிகளுடைய இதயம் போலே (நீயும்), இனிது உவந்து – நன்றாகக் கனிந்து; இன்று இப்போது; அடிமை தொழில் பூண்டாயே – கைங்கர்ய வ்ருத்தியை ஏற்றுக் கொண்டாய்.

“என் நெஞ்சமே! நீ வானவர் தங்கள் சிந்தை போல (திருவேங்கட முடையானுக்கு) இன்று அடிமைத் தொழில் பூண்டாயே! என்று உகந்து பேசுகிறார்.


காலம் நடையாடும் இவ்விருள் தருமாஞாலத்திலே பிறந்த என்னு டைய நெஞ்சாக நீ இருந்தும், இந்த மண்ணோருடைய நெஞ்சு எப்படி துர் விஷயங்களையே சிந்தை செய்கி றதோ அப்படி நீ விஷயாந்தரங் களைச் சிந்தியாமல், ஒரு நாளும் ஸம்ஸார நாற்றமே கண்டறியாத நித்யஸூரிகளின் நெஞ்சு போலே திருவேங்கடமுடையான் திறத்திலே அடிமைத் தொழிலை ஏற்றுக் கொண்டாயே, உன்னுடைய பாக்கி யமே பாக்கியம்! என்று புகழ்கிறார்.

மேவி – இது வினையெச்சமன்று; மேவியவன் என்னும் பொருள் கொண்ட பெயர்ச்சொல். மாண்குறளான அந்தணற்கு என்கிறார். இந்த பூமி வாமனன் பூமி. வாமனன் மண்ணிது என்கிறார் நம்மாழ்வார். தன்னுடையதான பூமியைப் பெறுவதற்கு யாசகனாக வந்து நின்றான். அந்த பெருமானுடைய குறை தீர, நெஞ்சமே! நீ அவனுடைய வஸ்துவாக அமையப்பெற்றாயே! என்கிறார். மாவலிபக்கல் வந்தபோது வாமந ப்ராஹ்மணனாக வந்தமையாலே “அந்தணற்கு” எனப்பட்டது. அன்றி, **“அந்தணரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்”** (திருக்குறள் – 30) என்றபடி அழகிய தண்மையையுடையவன் அந்தணன் என்ற தாய், மஹாதர்மிஷ்டன் என்னவுமாம்.

முதலடியில் “இனிது வந்து” என்றவிடத்து “இனிது உவந்து” என்றும், “இனிது வந்து” என்றும் பிரிக்கலாம். பாசுரத்தின் நிறைவாகச் சொல்ல வேண்டிய விஷயம். மற்ற திவ்ய தேசங்களில் மனசு எப்படியோ திருமலைக்கு வந்து நின்று விட்டால், அது நம்முடைய மற்ற அங்கங்களோடு சேர்ந்து கைங்கர்யம் செய்ய ஒன்றி நின்று விடுகிறது என்பது ஆழ்வார் அனுபவம்.

## குறுக்கெழுத்துப்புதிர் 106க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ட் | 2 ச | ய | ம் | | | 3 அ | டை | ச | ரி | 4 தி |
| ர் | ரி | ல் | ணி | ய | | | க | 5 சூ | | 6 உ | ப |
| ச் | தி | லி | பா | ன் | | | த் | ரி | | லூ | ரௌ |
| சு | ந் | ய | க | 7 ஜ | டா | யு | தி | ய | ம் | க | 8 தி |
| ன | வ | ன் | ங் | 9 ச | ஞ் | 10 ச | ய | ன் | வ | மா | ரு |
| ன் | ன் | | ர | ஞ் | | ந் | ர் | சு | ர | 11 மு | மா |
| 12 கி | 13 த | | 14 சா | 15 பா | ன் | தி | | | 16 அ | னி | ல் |
| ஷ் | | | | ற் | ர | ர | | | னு | வ | |
| கி | ன் | ட | ரு | 17 க | க | 18 ப | ல | ரா | ம | ர் | |
| ந் | ச | | | ட | னா | க | | | ன் | ணி | |
| தை | ம் | | | ல் | த் | வா | | | | கி | |
| | 20 க | 21 தா | னா | சு | 22 ர | ன் | | | | 19 ரோ | |




# நல்லுபதேசம் செய்த மைத்ரேயர்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்,
9486139685

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் பெருமைகளைப் பேசும் ஸ்ரீமத்பாகவதமும், மாபெரும் இதிகாசமாகிய மஹாபாரதமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீபலராமர், பாண்டவர்கள், ஸ்ரீவியாஸ பகவான் ஆகியவர்களைப் போன்று மைத்ரேயர் உள்ளிட்ட மகரிஷிகளும் இவ்விரண்டு மஹாகாவியங்களிலும் பேசப்படுகின்றனர்.

மித்ரர் என்ற முனிவரின் குமாரரும், பகவான் ஸ்ரீவேத வியாஸரின் நண்பருமாகிய மைத்ரேயர் பராசர மகரிஷியின் சிஷ்யரும் ஆவார்.

ஸ்ரீபராசர மகரிஷி தாம் இயற்றிய விஷ்ணு புராணத்தை மைத்ரேயருக்கு உபதேசிக்கின்றார் என்பதிலிருந்தே மிகவும் உயர்ந்ததாகிய அவருடைய ஆன்மீக மனோநிலை நமக்குப் புலனாகின்றது. இந்தத் தகுதியே பிற்காலத்தில் அவர் ஸ்ரீகிருஷ்ணபகவானிடமிருந்து நேரடியாக நல்லுபதேசங்களைப் பெறக் காரணமாயிற்று என்பதை ஸ்ரீமத் பாகவதம் எடுத்துக் கூறுகின்றது.

ஸ்ரீமத்பாகவதம் மூன்றாவது மற்றும் நான்காவது ஸ்கந்தங்களில் விதுரருக்கு மைத்ரேயர் மகரிஷி நல்லுபதேசங்கள் புரிந்தது விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

புத்திரபாசத்தினால் மதிமயங்கிய திருதராஷ்டிரனிடம் சென்ற விதுரர், “பாண்டவர்களுடன் பகைமை கொள்ளாமல், சமாதானம் செய்து கொள்வதுடன், ராஜ்ஜியத்தில் அவர்களுக்குரிய பாகத்தை ஒப்படைத்து விடுவதே சிறந்தது” என்று தரும நியாயங்களின் விளக்கத்தை எடுத்துக் கூறினார்.

இதனால் மிகவும் கோபமடைந்த திருதராஷ்டிரனும், அவருடைய புத்திரர்களாகிய கௌரவர்களும் “உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவர்” என்றும், “குலத்துரோகி” என்றும் விதுரரைப் பழித்தனர்.

இதனைக் கேட்டு மனம் நொந்த விதுரர் தம்முடைய வில்லையும் அம்பறாத்தூணியையும் அவ்விடத்திலேயே விட்டுவிட்டுத் தீர்த்த யாத்திரையாகக் கிளம்பினார்.

விதுரர் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைச் சிந்தித்தபடியே மேலும் தமது தீர்த்தயாத்திரையைத் தொடர்ந்து கங்கை நதிக்கரையிலுள்ள ஹரித்வாரத்தில் மைத்ரேய மகரிஷியைக் கண்டு பக்தியுடனும் அடக்கத்துடனும் நமஸ்கரித்து நின்றார்.

விதுரரைக் கண்டு மனம் மகிழ்ந்த மைத்ரேய மகரிஷி, ஜகத் சிருஷ்டிக்கு முன்பு பகவான் ஸ்ரீமந்நாராயணன் தாம் ஒருவராகவே இருந்ததையும், ஒரு விளையாட்டாக (லீலையாக) இப்பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்ததுடன், பஞ்சபூதங்கள், அவற்றின் குணங்கள், கர்மேந்திரியங்கள், ஞான இந்திரியங்கள், காலம் ஆகிய தத்துவங்களைப் பற்றியும், எம்பெருமான் திருவடிகளில் பக்தி கொள்ள வேண்டிய தன் அவசியத்தைப் பற்றியும் மிகவும் விரிவாக உபதேசம் அருள, விதுரரும் அவ்வார்த்தைகளை மிகவும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டார்.

பின்னர் அஸ்தினாபுரம் சென்று பாண்டவர்களுக்கு ஆசி கூறினார். அவ்வரண்மனையின் மற்றொரு பக்கம் புத்திரசோகத்தால் வருத்தமடைந்திருந்த தமையனார் திருதராஷ்டிரருக்கும், மதனியாகிய காந்தாரிக்கும் ஆறுதல் கூறி அமைதிப்

## 2025, ஜீன் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 02–10 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 06–10 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் தெப்போத்ஸவம். |
| 07–15 | அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 09 | நம்மாழ்வார் சாத்துமுறை. |
| 09–11 | திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம். |
| 17–19 | திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம். |

படுத்தியதுடன், அவ்விருவரையும் வானப் பிரஸ்தம் செல்லத் தூண்டினார். அவ்விருவருக்குத் துணையாகத் தாமும் வனத்திற்குச் சென்று தமது எஞ்சிய வாழ்நாளை ஆன்மீகச் சிந்தனைகளிலேயே கழித்தார். விதுரருக்கு உபதேசம் செய்த மைத்ரேயர், மகாபாரத யுத்தத்திற்கு முன்பாக, திருதராஷ்டிர புத்திரனாகிய துரியோதனனுக்கும் உபதேசம் செய்ய நேர்ந்தது.

இம்மகரிஷி அஸ்தினாபுரத்திற்குச் செல்வதற்குச் சற்று நேரத்தில் அங்கே எழுந்தருளிய மைத்ரேய மகரிஷி, "துரியோதனா! ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் துணையுடன் விளங்கும் பெரும் பலசாலிகளும், மகாவீரர்களுமாகிய பாண்டவர்களை யுத்தத்தில் உன்னால் வெல்ல இயலாது. உடனடியாக அவர்களுடன் சமாதானமாகச் சென்று விடு!" என்று உபதேசம் செய்ய, அதைக் கேட்டுக் கோபமடைந்த துரியோதனன் அவரை அவமதிக்கும் விதமாக பதில் ஏதும் கூறாமல், தனது தொடையைத் தட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

துரியோதனன் அலட்சியத்தால் கோபம் கொண்ட மைத்ரேயர் "மதிகெட்டவனே! பாண்டவர்களுடனான யுத்தத்தில் உனது தொடைகள் பிளக்கப்படும்!" என்று சபித்தார். அதைக்கேட்டு நடுங்கிய திருதராஷ்டிரன், "ஸ்வாமி சபிக்காதீர்கள்!" என்று மன்றாட, "எனது அறிவுரையைக் கேட்டு நடந்தால் எனது சாபம் வலு விழக்கும். இல்லையேல் துரியோதனனின் தொடைகள் பிளக்கப்படுவது நிச்சயம்" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடமிருந்தே நேரடியாக நல்லுபதேசங்களைப் பெற்ற மைத்ரேய மகரிஷியானவர் விதுரர், துரியோதனன் ஆகிய இருவருக்கும் உபதேசம் செய்தார். தர்மவானாகிய விதுரர் தாமும் ஆன்மீகத் தெளிவைப் பெற்றதுடன், தம்முடைய தமையனார், மதனி ஆகியோரையும் நல்வழிப்படுத்தி தெய்வச் சிந்தனையில் ஈடுபடச் செய்தார்.

ஆனால், ஆணவம் கொண்ட துரியோதனனோ அம்மகானின் உபதேசத்தை மதிக்காமல் தனது அழிவைத் தானே தேடிக் கொண்டான். தாடகையின் மார்பைத் துளைத்த ஸ்ரீராமபிரானின் அஸ்திரம், *''புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்னே!''* என்ற கம்பநாட்டாழ்வாரின் வார்த்தைகளுக்கு உதாரணமாகவே துரியோதனனின் செய்கை அமைந்து விட்டது அல்லவா?


"உபதேசம் அளிப்பவர் எத்தனை உயர்ந்தவராக இருந்தாலும் உபதேசிக்கப்படுபவரின் தகுதியைப் பொறுத்தே அவ்வுபதேசம் உரிய பலனை அளிக்கின்றது" என்ற அரிய வாழ்வியல் உண்மையினை ஸ்ரீமத்பாகவதமும், மஹாபாரதமும் கூறும் மைத்ரேய மகரிஷியின் சரித்திரம் நமக்கு நன்கு விளக்குகின்றது என்றால் அது மிகையாகாது.

*தொடர்ந்து அலசுவோம்...*

## மங்கள சுலோகங்கள்

*ஆர்த்தாநாமார்த்திஹறன்தாரம் பீதானாம் பீதிநாசனம்*
*த்விபதாம் காலதண்டம் தம் ராமசந்த்ரம் நமாம்யஹம்*

**இடர்ப்படுவோரின் இடர்களைக் களைபவனும், அச்சமுற்றோரின் அச்சத்தை அகற்றுபவனும், எதிரிகளுக்கு காலனாக (யமதண்டம் போல்) விளங்குபவனுமான இராமச்சந்திரனை வணங்குகிறேன்.**





# மே 2025

# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில்துறையில் செலவுகள் அதிகமாகும். புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டு முன்னேற்றம் பெறுவீர்கள். உடல் உஷ்ணமடையும். தொழில்துறையில் சில வாரங்கள் புது முயற்சிகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் ஓரளவு நல்ல மதிப்பெண் பெறுவர். பெண்களுக்கு குடும்பச் சூழலில் இருந்த குழப்பங்கள் தீரும். பொதுவாக நன்மையும், தீமையும் கலந்த மாதமிது.

**ரிஷபம்**

தொழில்துறையில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. மனைவி மற்றும் இளைய சகோதரரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. குழந்தைகளின் கல்விக்காக அதிக செலவுகளைச் செய்வீர். மாதத்தின் பின் பகுதியில் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. தொழில்துறையில் புதிய முயற்சிகளைச் செய்யலாம். மொத்தத்தில் ஏற்றம் தரும் மாதமிது.

**மிதுனம்**

தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில்துறையில் லாப நோக்கத்தோடு செயல்பட்டு வெற்றியைப் பெறுவீர். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் அதிகமானாலும் அதற்குரிய வருமானம் கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உங்கள் ஜாதகத்தில் இருக்கும் குறைகளுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய மாதமிது. பொதுவாக நல்ல யோகத்தைத் தரும் மாதமிது.

**கடகம்**

உங்கள் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட குறைகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில்போட்டியில் வெற்றியைப் பெறுவீர்கள். சொந்த பந்தங்களில் இருந்த பகைமை விலகும். நல்ல காரியங்களுக்கு தலைமை ஏற்று நற்பெயரைப் பெறுவீர்கள். மொத்தத்தில் சகல பிரச்சனைகளும் தீர்ந்து நன்மை தரும் மாதமிது.

**சிம்மம்**

குடும்பத்தாரின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் மாற்றம் உண்டு. பிரயாணங்களில் எச்சரிக்கை தேவை. நண்பர்கள், உறவினர்களால் செலவினங்கள் அதிகமாகும். விவாதங்களைத் தவிர்ப்பது நன்று. மாணவர்கள் மிகுந்த சிரத்தையுடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பெற்றோர் ஆலோசனைகள் வழங்குவர். மிகுந்த சிரமத்துடன் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

தொழிலில் அலைச்சல் அதிகமாகும். இளைய சகோதரனுக்கு நன்மையுண்டு. மூத்த சகோதரனுக்கு ஆரோக்யம் குறையும். தெய்வ தரிசனம் கிட்டும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். குழந்தைகளுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று, நல்ல கல்லூரிகளில் சேருவர். பெண்களுக்கு நல்ல ஏற்றம் உண்டு. மிகுந்த அலைச்சலின் பேரில் வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். தொழிலில் அலைச்சல், வேலைபளு அதிகமாகும். வளர்ச்சி உண்டு. மனைவி நல்ல ஆலோசனைகள் வழங்குவார். செலவினங்களுக்கு ஏற்ற வருமானமும், புது முயற்சிகளில் வெற்றியும் உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி பேச வேண்டாம். பணச்சிக்கலைத் தவிர்க்க வேண்டிய மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். அலைச்சல் குறையும். வெற்றியுண்டு. தொழில் வருமானத்தை வைத்து கடன் தீர்ப்பீர். பண விஷயங்களில் ஏமாறுவீர்கள். சகோதரனுக்கு நன்மையுண்டு. குழந்தைகள் கல்விக்காக வேறு ஊர் செல்வீர்கள். வீட்டில் உள்ள பெரியவர்கள் ஆதரவுடன் எச்சரிக்கையோடு முன்னேறும் மாதமிது.

**தனுசு**

தக்க மருத்துவம் கிட்டும். கல்விக்காக அதிக செலவாகும். சொத்துக்களைப் பற்றி பேச வேண்டாம். கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். தாய்க்கு மூட்டுவலி உண்டாகும். திருஷ்டியால் தொழிலில் தேக்க நிலை நிலவும். பிரச்சனை ஏற்பட்டு பின் சரியாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். பெண்களுக்கு உறவினரால் பிரச்சனை உண்டு. மாத பின் பகுதியில் ஏற்றம் உண்டு.

**மகரம்**

கடன் வாங்கி வீடு, மனை வாங்க, வெளிநாடு செல்ல யோகம் உண்டு. சகோதர ஆதரவு உண்டு. பெற்றோர் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் வளர்ச்சி, முன்னேற்றம், குழந்தைக ளால் நன்மை உண்டு. திடதேக ஆரோக்கியம் உண்டு. மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்கள், வேலை வாய்ப்பு கிட்டும். சம்பள உயர்வு, இட மாற்றம் உண்டு. கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**கும்பம்**

உடல் உபாதைகள், கடன்சுமை தீரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தாராள பணவரவு உண்டு. பதவி உயர்வு உண்டு. பூர்வீகச் சொத்தில் வில்லங்கம் விலகும். பெற்றோர் ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று நல்ல கல்லூரிகளில் சேருவர். பெண்களுக்கு நினைத்ததைச் சாதிக்கும் யோகம் உண்டு. பொதுவாக வெற்றிகள் குவியும் மாதமிது.

**மீனம்**

தங்கள் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் அலைச்சல் மிகுதி. உடல் வலி, கண்வலி வந்து போகும். மாணவர்களுக்கு முயற்சி திருவினையாக்கும். மாதத்தின் பின் பகுதியில் நன்மையுண்டு. விவாதங்களையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். புதிய முதலீடுகளில் எச்சரிக்கை தேவை. மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டிய மாதமிது.



# உண்மையான பக்தி



**ஒருவருக்கு உறுதியான நம்பிக்கை இல்லாமல் பக்தியிருந்தால் அது வீண் ஆகும்.**

**நம்பிக்கையும் முழு அர்ப்பணிப்புமே உண்மையான பக்தி ஆகும்.**

**ஒரு வேடனின் பக்திக்குக் கட்டுப்பட்ட நரசிம்மர்...**

*- திரு. எம். அசோக் ராஜா, திருச்சி, 9750333265*

ஆதி சங்கரரின் சீடரான பத்மபாதர் நரசிம்ம ஸ்வாமியின் தீவிர பக்தர். அவருக்கு நரசிம்ம ஸ்வாமியை நேரில் காண வேண்டும் என வெகு நாட்களாக ஆசை. இதனால் நரசிம்மரை நோக்கி கடும் தவம் புரிவதற்காக அடர்ந்த காட்டில் வெகு நாட்களாக கண்களை மூடி நரசிம்மரைக் காண வேண்டி தியானத்தில் ஆழ்ந்தார். அப்போது அந்த வழியாக வந்த வேடன் ஒருவன், “யாரு சாமி நீ? பல நாட்களாக நான் உன்னை இங்கு பார்க்கிறேன். எதற்காக இங்கு வந்து கண்ணை மூடி உட்கார்ந்து இருக்கிறாய்” எனக் கேட்டான்.

அவனுக்குப் பதில் அளித்த பத்மபாதர், “நான் நரசிம்மரைக் காண்பதற்காக தவம் செய்கிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே” எனக் கூறினார். “நரசிம்மமா? அப்படின்னா என்ன சாமி?” என அறியாமையுடன் கேட்டான் வேடன்.

“நரசிம்மம் என்றால் மனிதன் பாதி, மிருகம் பாதி. அதைப் பற்றி சொன்னால் உனக்குப் புரியாது” என்று சொல்லிவிட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார் பத்மபாதர். ஆனால் வேடனோ, “நீ சொல்வது போன்ற ஒரு மிருகத்தை இதுவரை நான் இந்தக் காட்டில் பார்த்தது கிடையாது. உன்னைப் பார்த்தால் எனக்குப் பாவமாக உள்ளது. உனக்காக இன்று பொழுது சாய்வதற்குள் அந்த மிருகம் எங்கிருந்தாலும் பிடித்துக் கட்டி இழுத்து வருகிறேன்” என்று சொல்லி விட்டு, காட்டிற்குள் சென்றான் வேடன். மான், முயல் என எத்தனையோ கண்ணில் பட்டும் அவற்றைப் பொருட்படுத்தாமல் நரசிம்மரின் மீதே அவனது சிந்தனை இருந்தது.

பசி, தாகம் அத்தனையும் மறந்து காடு முழுவதும் தேடினான். கிடைக்கவில்லை. அந்தி சாயும் நேரம் ஆனது. “தான் கொடுத்த வாக்குப்படி நரசிம்மத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே” என மனம் வருந்திய வேடன், “இனியும் தான் உயிர் வாழ்வதில் அர்த்தம் கிடையாது” என நினைத்தான். கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் வாழ்வதை விட சாவது மேல் என் நினைத்த வேடன் ஒரு பெரிய பாறையின் மீது ஏறி உயிரை விடத் தயாரானான். அவனது அர்ப்பணிப்பைக் கண்டு உருகிப் போன ஸ்ரீமந்நாராயணன் நரசிம்மமாக வேடனுக்குக் காட்சி கொடுத்தார்.

தான் நாள் முழுவதும் தேடி அலைந்த நரசிம்மம் தன் முன் தோன்றியதைக் கண்டு உற்சாகமடைந்த வேடன், “மாட்டிக்கிட்டாயா? உன்னை விடுவேனா பார்” என்று சொல்லி செடி, கொடிகளை வைத்து நரசிம்மரைக் கட்டி பத்மபாதர் முன்பு அழைத்து வந்தான். பெரிய பெரிய வேதாந்திகளுக்கும் ரிஷிகளுக்கும் கட்டுப்படாத அந்த பரம்பொருள் ஒரு வேடனின் அன்பிற்கு கட்டுப்பட்டு நின்றார்.

“இதோ நீ கேட்ட நரசிம்மம்” எனக் காட்டினான் வேடன். பத்மபாதர் கண்களுக்கு நரசிம்மம் தெரியவில்லை. அந்தரத்தில் நின்ற செடி, கொடிகள் மட்டுமே சுற்றிக்கொண்டு நிற்பது தெரிந்தது. இதனால் கோபம் அடைந்த பத்மபாதர்,

**பதக்கவி**

**அன்னமாச்சார்யர்**



ஆந்திர மாநிலம் ஈன்றெடுத்த வாக்கேயகாரர்களிலே மிகச் சிறந்தவர் பதக்கவிதை பிதாமஹர் ஸார்வபௌம, சங்கீர்த்தனாச்சார்யா போன்ற பல விருதுகளைப் பெற்று நம்மிடையே மானசீகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தாள்ளப்பாக்க ஸ்ரீஅன்னமாச்சார்யார் ஆவார். தமது கீர்த்தனைகளில் தனக்கென தனிப்பாணி அமைத்து புதுமைகளைப் புகுத்தியவர்.

சுமார் 32,000 கீர்த்தனைகளைப் பாடியவர். அன்னமய்யா கீர்த்தனைகள் தினமும் மாலை வேளையில் திருமலையப்ப ஸ்வாமி சஹஸ்ர தீபாலங்கார சேவையின் போது கீர்த்தனை பண்ணுவதற்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ளது. அதுமட்டுமல்லாமல் உற்சவ காலங்களிலும் கலைஞர்களால் அன்னமய்யா கீர்த்தனைகள் இசைக்கப்படுகிறது.



“பைத்தியமே, அந்த நரசிம்மர் என்னுடைய அரிய தவத்திற்கு வர மறுக்கிறார். உன்னிடமா சிக்குவார். வெறும் செடி, கொடிகளைக் காட்டி நரசிம்மம் என்கிறாயே” என ஏளனமாகச் சிரித்தார். ஆனால், தான் கட்டிக்கொண்டு வந்திருப்பது நரசிம்மம் என வேடன் பலமுறை சொல்லியும் பத்மபாதர் கண்ணுக்குத் தெரியவில்லை. அப்போது ஒரு அசரீரி கேட்டது.

“பத்மபாதா, வேடன் என்னை அடைந்தே தீர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தேடி அலைந்தான். என்னைக் காணாததால் உயிரை விடுவதற்கும் தயாரானான். ஆனால், நீயோ அலை பாயும் மனதுடன் நான் வருவேனோ மாட்டேனோ என்று சந்தேகத்துடன் தவம் செய்தாய். உன்னிடம் ஆணவமும் உள்ளது. அப்படி இருக்கும்போது உனது கண்ணிற்கு நான் எப்படி தெரிவேன்?” எனக் கூறி மறைந்து விட்டார் நரசிம்மர்.

ஒரு வேடனின் பக்திக்குக் கட்டுப்பட்ட நரசிம்மர், தனக்குக் காட்சி அளிக்காமல் போனதற்கும், வேடனைப் போல் தனக்கு உறுதியான நம்பிக்கை இல்லாததற்கும் வெட்கி தலைக் குனிந்தார் பத்மபாதர். அதோடு, வேடனின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டு, நம்பிக்கையும் முழு அர்ப்பணிப்புமே உண்மையான பக்தி என்பதை புரிந்து கொண்டார்.


## கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 18-05-2025 | ஞாயிறு | --- | அங்குரார்ப்பணம் |
| 19-05-2025 | திங்கள் | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 20-05-2025 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 21-05-2025 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 22-05-2025 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 23-05-2025 | வெள்ளி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 24-05-2025 | சனி | ஹனுமத் வாகனம்<br>மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 25-05-2025 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 26-05-2025 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 27-05-2025 | செவ்வாய் | பல்லக்கு உத்ஸவம், தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உத்ஸவம் துவஜாவரோஹணம், த்வாதசாராதனம் |
| 28-05-2025 | புதன் | புஷ்பயாகம். | |



# சிறுவர் உலகம்
## பல்சுவைப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!



சரியான பாதையைக் கண்டுபிடியுங்கள்!





சிறுவன் பக்தப் பிரகலாதனுக்கு தூணிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியைச் சென்றடைவதற்கான பாதையைத் தேர்ந்தெடுங்கள்!

இந்தப் படங்களைப் பாருங்கள்!



பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தினைக் கொணர, மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை கயிறாகவும் பற்றி ஒரு புறம் தேவர்களும், மறுபுறம் அசுரர்களும் கடைய உதவி புரிந்த அவதாரம்..........

**விடை : ஸ்ரீகூர்மாவதாரம்**

ஸ்வாமி பெயரைச் சொல்லுங்கள்!



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-34

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. இராமாநுஜரால் "நீ ஒருவனே ஆண்பிள்ளை" என்றழைக்கப்பட்டவர்........................................................
2. திவாகரர் என்று போற்றப்படும் ஆசாரியர்..................................................................................
3. ஆதிசங்கரர் நர்மதை நதிக்கரையில் யாரை குருவாக ஏற்றார்..........................................................
4. ஸ்ரீகாமாஸிகாஷ்டகம் எனும் ஸ்தோத்திரத்தை இயற்றியவர்............................................................
5. விதுரருக்கு நல்லுபதேசம் செய்த மகரிஷி ...................................................................................
6. அனந்தாழ்வார் யாருடைய உபதேசம் ஏற்று திருமலைக்குச் சென்றார்................................................
7. திருவிடந்தை திவ்யதேச உத்ஸவப் பெருமானின் திருநாமம்...........................................................
8. "நின்னோடும் எழுவரானோம்" என்று கூறியவர்..........................................................................
9. திருவிடந்தை திவ்யதேச விமானத்தின் பெயர்...........................................................................
10. அசோக வனத்தில் சீதாதேவியிடம் கணையாழி பெற்றவர்................................................................
11. காஞ்சி வரதனுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்தவர்.............................................................
12. "ஓடி விளையாடு பாப்பா" என்று குழந்தைகளுக்குக் கூறியவர் ......................................................
13. ஆதிசங்கரரின் பெற்றோர் பெயர்.........................................................................................
14. திருமலையில் இராமாநுஜ புஷ்கரணியை அமைத்தவர்.....................................................................
15. "கலௌ வேங்கட நாயக:" எனப் போற்றப்படுபவர்..........................................................................

### போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.05.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |





சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில்

விடையை எழுதுங்கள்!!







**விடைகள்**

1) நரசிம்மர், 2)நரசிம்மர், 3) மஹாலக்ஷ்மித் தாயார், 4) வைகாசி மாதம், சதுர்த்தசி, 5) அந்தி சாயும் வேளை, 6) நரசிம்மர், 7) இரண்யகசிபு 8) பிரகலாதன்.

## கணித விளையாட்டு

இங்கு மண்பானையில் உள்ள கணித விடைக்குப் பொருத்தமான தட்டுகளின் விடையைப் பொருத்துக




**விடைகள்**

1) v, 2) iii, 3) iv, 4) ii, 5) i



*இங்குள்ள பொருட்கள் எந்த காலத்தை நமக்கு நினைவூட்டுகின்றன?*

**விடை : கோடைக்காலம்**



சித்திரக் கதை

# சுய சிந்தனையே நன்மை பயக்கும்

கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு. து.சிவாஜி





மந்தரை கூறியதைக் கேட்டவுடன் கைகேயி அச்சமுற்றாள்.
என் பரதன் வனத்திற்குச் சென்று விடுவானா? அந்த துர்கதி என் மகனுக்கு வருமா?
இப்போது விளங்கியது உன் வார்த்தைகள். இதனை இராமனே அனுபவித்தல் வேண்டும்.
இதற்கு என்ன வழி?
அதற்கு வழி உள்ளது. அன்று மகாராஜா உனக்கு அளித்த வரங்களே ஆகும். தற்போது அந்த வரங்களை மகாராஜாவிடம் கேட்டுப் பெற்றிடு.
கோபத்துடன் சென்று நினைத்ததைப் பெற்றிடு. பரதனின் பட்டாபிஷேகமா? இராமனின் வனவாசமா? என்பதை எண்ணி விடு.
மகாராஜா வரங்களை அளித்திடுவாரா?
முதலில் வரங்களை நிறைவேற்றுவேன் என்னும் வாக்குறுதியை பஞ்ச பூதங்களின் சாட்சியாகப் பெற்றிடு. அப்போது மகாராஜா வாக்குறுதியை நிறைவேற்றியே ஆக வேண்டும்.
சரி நீ கூறியபடியே செய்கிறேன். மந்தரை! நாம் நினைத்தது நிறைவேறினால் உன் கூனிற்கு தங்கக்கவசம் அளிக்கின்றேன்
ஹா...ஹா... ஹா... விடிந்ததும் என் பரதன் இந்த அயோத்தி நகரத்தின் சக்கரவர்த்தி. நான் ராஜமாதா.
மந்தரையின் பேச்சைக்கேட்டு கைகேயி துன்பமுற்றாள். இறுதியில் தன் கணவனை இழந்தாள். அனைவரின் பார்வையில் குற்றவாளியாக நின்றாள். இன்றையச் சூழலிலும் இத்தகைய மந்தரைகள் உள்ளனர். எச்சரிக்கையாக இருந்து சுயபுத்தியுடன் யோசித்தால் அனைவரும் நலமாக வாழலாம்.
நமது சிந்தனைகளால் நலமாக வாழ்வோம்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்:

*சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர் களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும்*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு அவர்களின் பேரனும், மாண்புமிகு அமைச்சர் திரு.நாரா லோகேஷ் அவர்களின் மகனுமான செல்வன் தேவன்ஸ் 11வது பிறந்த நாளினை முன்னிட்டு குடும்பத்தினரோடு 21-03-2025 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்த பின்னர் மாத்ருஶ்ரீ வெங்கமாம்பா அன்னதானக்கூடத்தில் பக்தர்களுக்கு உணவினை பரிமாறினார். இதுபோது முதல்வர் அவர்கள் ஒருநாள் அன்னதான திட்டத்திற்கான ரூ.44 லட்சம் நன்கொடையும் வழங்கினார்

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள், ஆந்திர மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் அவர்கள் பங்கு கொண்டனர்





தி.தி.தே. ஸப்தகிரி மாத இதழ் பிரதான ஆசிரியர் அலுவலகத்தில் சிறப்பு நிலை துணை ஆசிரியரான (தெலுங்கு) டாக்டர். கம்பல்லே ரவிச்சந்திரன் அவர்களுக்கு ஆந்திர மாநில அரசு சார்பில் மாண்புமிகு முதல்வர் திரு.நாரா சந்திரபாபு நாயுடு அவர்கள் 30-03-2025 யுகாதி தினத்தன்று உயரிய "கலாரத்னா" விருது வழங்கி கௌரவித்தார். இதற்கு ஸப்தகிரி மாத இதழ் பிரதான ஆசிரியர் டாக்டர்.கே.ராதா ரமணா, ஆசிரியர் டாக்டர் வி.ஜி.சொக்கலிங்கம் மற்றும் ஊழியர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு 07-03-2025 அன்று தி.தி.தேவஸ்தானத்தில் வெவ்வேறு துறைகளில் பணிபுரியும் 12 மகளிருக்கு "பத்மாவதி மகிளா" விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் அவர்கள், தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-04-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

மாதா ந்ருஸிம்ஹச்ச
பிதா ந்ருசிம்ஹ:
ப்ராதா ந்ருசிம்ஹச்ச
ஸகாந்ருசிம்ஹ:
வித்யாந்ருசிம்ஹோ
த்ரவிணம் ந்ருசிம்ஹ:
ஸ்வாமி ந்ருசிம்ஹ:
ஸகலம் ந்ருசிம்ஹ:



நரசிம்ம ஜெயந்தி
11-05-2025